# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 25. தொலை பேசி: 23411

வள்ளுவர் ஆண்டு 2003, சித்திரை 4உ. (16-4-72) ஞாயிறு 1391 ரபி அவ் 1 புத்தகம் 25 இதழ் 21


# தமிழ் வணக்கப் பாடலுக்குத் தடை!

## ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கெடுபிடி!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையில் தமிழ் வணக்கப்பாடல் ஒன்றுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதைவிட இன்னும் பல தமிழுணர்ச்சிப் பாடல்களுக்கும் தடைவிதிக்கப் பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

'நீராடும் கடலுடுத்த
நிலமடந்தை'

என்று தொடங்கும் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையின் தமிழ் வணக்கப்பாடல், தமிழ்நாடு அரசின் இறை வணக்கப் பாடலாக ஒப்புக் கொள்ளப்பட்டிருப்பதும், அப்பாடல் தமிழக அரசின் பொது வைபவங்களின் தொடக்கத்தில் பாடப்படுவதும் தெரிந்ததே;

இந்தத் தமிழ் வணக்கப் பாடலை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் வர்த்தக சேவையில் இதுவரை காலமும் ஒலிபரப்பி வந்தார்கள். இப்போது இப்பாடல் ஒரு தி.மு.க. பாடல் என்று காரணம் காட்டி இடுநிப் பெற்ற இந்தப் பாடலை ஒலிபரப்பக்கூடாதென்று கூட்டுத்தாபன நிர்வாகம் கட்டளையிட்டுள்ளதாம். குறித்த பாடலிலுள்ள இசைத்தட்டும் அங்கிருந்து அகற்றப்

(5-ம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பிலும் சிங்களத் திணிப்பு!

நூற்றுக்கு நூறு வீதம் தமிழ் நாடாம் மட்டுநகரிலும் கல்வியமைச்சினால் தனிச் சிங்களம் திணிக்கப்படுகிறது.

அண்மையில் இரண்டாந்தரத் தலைமை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்ற மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் ஆசிரியர்களுக்கு, மட்டக்களப்பிலுள்ள பிராந்தியக் கல்விக் கந்தோரினால் அனுப்பப்பட்ட நியமனக் கடிதங்கள் தனிச் சிங்களத்திலே இருக்கின்றன. தனிச் சிங்களக் கடிதம் பெற்ற தமிழ் ஆசிரியர்கள் ஆசிரியர் சங்கத்தின் மூலம் தமது ஆட்சேபனையைத் தெரிவித்து, தமிழாசிரியர்களாகிய தமக்கு தமிழிலேயே கடிதத்தைத் தரும்படி கேட்டுள்ளனர்;

1: தமிழாசிரியர்களுக்குச் சிங்கள அறிவு தேவையில்லை என்பது எப்போதோ அரசாங்கத்தால் ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளது;

2: தமிழாசிரியர்களுடனும் தமிழ்ப்பாடசாலைகளுடனும் அரசாங்கம் வைக்கும் தொடர்புகள் தமிழில் அல்லது தமிழிலும் இருக்கவேண்டும் என்பதும் அரசாங்கத்தால் ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

3: மட்டக்களப்பிலுள்ள பிராந்தியக் கல்விக் கந்தோர், நியாயமான அளவு

(5-ம் பக்கம் பார்க்க)

## சுதந்திரன் ஆசிரியரின் இல்லத்தை பொலிசார் சுற்றிய மர்மம் என்ன?

இம்மாதம் 6ம் திகதி வியாழக்கிழமை கோப்பாயிலுள்ள சுதந்திரன் ஆசிரியரின் இல்லத்தை பொலிசார் மூன்று தடவைகள் ஜீப்பில் மோப்பமிட்டுச் சென்றுள்ளனர். ஆசிரியர் ஊரில் இருக்கிறாரா என்றும் விசாரித்தனராம்.

இதன் மர்மம் என்ன?

## நாவலர் தலைமையில் புனரமைப்பு வேலைகள்!



தமிழரசுக்கட்சியின் புனரமைப்பு வேலைகளைக் கவனிப்பதற்கு நாவலர் அமிர்தலிங்கம் தலைமையில் ஒரு குழுவை தமிழரசு மத்திய செயற்குழு நியமித்துள்ளது. குழுவின் செயலாளராக திரு. வி. என். நவரத்தினம் தெரிவுசெய்யப்பட்டார். இக்குழுவின் உறுப்பினர்களாக, திரு. எக்ஸ். எம். செல்வநாயகம், உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## வவுனியாவில்வீட்டுநிலம் 90 விதம் சிங்களவருக்கு?

அண்மையில் வவுனியாவில் வீடு கட்டிக்கொள்ள விரும்புவோருக்கு நிலம் வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டது தெரிந்ததே.

இதற்கிணங்க வவுனியாவில் வீடற்ற தமிழ் பேசும் மக்கள் ஏராளமானோர் வீடு கட்ட நிலம் கோரி விண்ணப்பித்திருந்தனர்.

ஆனால் நமக்கு கிடைத்த செய்திகளின்படி இந்த திட்டத்தில் 90 வீதம் சிங்கள மக்களுக்கே ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

தமிழ் பிரதேசத்தை சிங்கள மயமாக்கும் மற்றோர் சதித்திட்டமா இது என வீடற்ற வவுனியா தமிழ் மக்கள் ஆத்திரத்துடன் கேட்கிறார்கள்.

## கதிரவேற்பிள்ளை நா. உ. புதிய பொதுச்செயலாளர்!



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய பொதுச்செயலாளராக கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேற்பிள்ளை 8. 4. 72ல் கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழரசு மத்திய செயற் குழுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டார்.

தமது பதவி விலகல் கடிதத்தை திரும்பப்பெறுமாறு நாவலர் அமிர்தலிங்கம் முற்றாக மறுத்து விட்டமையால் தொடர்ந்தே திரு. கதிரவேற்பிள்ளை பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டார்;

தமிழரசுத் தந்தை செல்

(5-ம் பக்கம் பார்க்க)

இடதுசாரிகளின் கட்டுப்பாட்டிலுள்ள அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம் தனது தமிழ்த்துவேஷத்தை மீண்டும் ஒரு முறை கக்கியுள்ளது.

அரசாங்க சேவையிலுள்ளவர்களில் முதலாம் தரத்துக்கு பதவி உயர்வு கொடுக்கப்பட வேண்டியவர்களின் தகுதி பற்றி முடிவு செய்து பதவி உயர்வு கொடுக்க வேண்டியது. அரசாங்க சேவைக் கமிஷனின் கடமையாகும்!

## 'அலி' சங்கத்தின் இனவெறி

ஆனால் 'அலி' சங்கமோ, சிங்களமொழித்தேர்ச்சி இல்லாதவர்களுக்கு முதலாம் தர பதவி உயர்வு கொடுக்கப் படுவதை பொது நிர்வாக

(4-ம் பக்கம் பார்க்க)

# அன்பற்ற தியாகருக்கு ஆத்திரத்தில் ஓர் கடிதம்

காவடித் தியாகரைப் பாராளுமன்றம் அனுப்ப தமது முழு நேரத்தையும் அர்ப்பணித்து உழைத்த வரும் இலங்கைப் பரிபாலன சேவையிலிருந்து இளைப்பாறியவரும் காரைநகர்வாசியுமான திரு: ஆ. கனகசபை ஜே. பி; அவர்கள் 31-3-72ல் காவடித் தியாகருக்கு வரைந்த பகிரங்கக் கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"நான் உன்னைப் பாராளுமன்றம் அனுப்ப எவ்வளவு பாடுபட்டேன் என்பதை மறந்துவிட்டாய். நான் இல்லையென்றால் நீ பாராளுமன்றம் சென்றிருக்கமாட்டாய். இன்று அந்த நன்றியை மறந்து வானரையும், நடராசன்களையும், முருகேசன்களையும் பரம் பொருள்கள் எனக் கருதி அவர்களுடைய போதனையையும் பின்பற்றி, காரைநகரைக் குட்டிச்சுவராக்கும் நிலைக்கு கொண்டுவந்துவிட்டாய்—

காரைநகர் வடக்கு கிராமச் சங்கப் பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் இரட்டிப்பு வரி செலுத்தவும் ஒரு சில பணக்காரர் நன்மையடையவும் வழிவகுத்தாய்;

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நிருவாகச் சீர்கேடுகளையும், மோசடிகளையும், திறமையற்ற நிருவாகத்தையுமிட்டு கவலையுற்றிருக்கும் பாவனையாளர்களின் ஏகோபித்த அதிருப்தியை உனக்கு எடுத்துக்கூறியும், உன்னால் நியமிக்கப்பட்ட சபையினர் மீது நடவடிக்கை எடுக்க திராணியற்று அவர்களின் சூழ்ச்சிக்கு பலியாகி, ப. கூ. சங்கத்தை சீர்கெட்ட நிலைக்கு

(5-ம் பக்கம் பார்க்க)

## 'அமிர்' என்றால் அமிர்தலிங்கம்! 'திமிர்' என்றால் தியாகராசா!

"நாட்டின் அரசியல் தலைவர்கள் பலரும் நண்பர்களும் பத்திரிகையாளர்களும் தளபதி அமிர்தலிங்கம் அவர்களை 'அமிர்' என்று செல்லமாகவும் சுருக்கமாகவும் அழைப்பதுண்டு: தியாகராசா இந்நாட்களில் பேசும் பேச்சுகளைப்பார்த்தால் தியாகராசாவை 'திமிர்' என்று சுருக்கமாக அழைக்கலாம்போல் தோன்றுகிறது. 'அமிர்' என்றால் அமிர்தலிங்கம் அவர்களைக் குறிக்கும். 'திமிர்' என்றால் தியாகராசாவைக் குறிக்கும்;"

—காசி ஆனந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்



டீ. எஸ். சிங்கம்,
முள்ளியவளை:

கே: என் காதலி என் மீது ஆசைகொண்டபோது வெகுவாகச் சிரித்தாள்-இப்போது வெகுவாக என்னைப் பார்த்து ரசிக்கின்றாள் அதன் மர்மமென்ன?

ப: அந்த 'மர்மம்' உமக்குத் தான் நன்றாகத் தெரியுமே—என்னைக் கேட்கிறீரே!

❀

க. நாகேஸ்வரன்,
கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்:

கே: இனிப்புக்கும் உறைப்புக்கும் விலையேறி விட்டது—புளிக்கு என்ன நடக்கும்?

ப: புளிக்கு மட்டும் விலையேறாது — ஏனெனில் ஒவ்வொருவருக்கும் அளவுக்கு மிஞ்சி புளிப்புதட்டிவிட்டது (தணிக்கை)

கே: தமிழரசுக் கட்சி வீட்டை ஏன் தனது சின்னமாக தேர்ந்தெடுத்தது?

ப: தமிழினத்திற்கு ஒரு சொந்த வீடு வேண்டும் என்பதை நினைவூட்ட!

❀

எம். ஏ: தமிழ்த் தோழன்
அஜ்வத்
பி 34, மட்டக்களப்பு:

கே: தமிழ் மக்களையும் தமிழ் மாணவர்களையும் தாழ்த்திபேசும் தமிழ்துரோகிகளுக்கு தமிழ் மக்களாகிய நாம் செய்ய வேண்டியதென்ன?

ப: மோதி மிதித்து விடு பாப்பா — அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா — என்று பாரதி கூறியதையே நினைவூட்டுகிறேன்!

❀

ம. மஸ்உமர்,
காலையடி,
பண்டத்தரிப்பு:

கே: குமாரசூரியரைத் தலைவராகக் கொண்ட தியாகராசாவிடம் குமாரசூரியர் எந்தக்கட்சியின் தலைவர்? அதன் கொள்கை என்ன? அக்கட்சியில் எனக்கும் ஏனைய தமிழ் மக்களுக்கும் இட-முண்டா என்பதை கேட்டுச் சொல்வீரா?

ப: என்னையும் 'பனி' என்று நினைத்தீரோ?

❀

தமிழ் நேசன்,
நீர்வை வாசன்:

கே: காரைதீவிலேயே கூட்டம் கூட்ட முடியாது கவலைப்படும் தியாகராசாவுக்கு ஈழநாடு முதற்பக்கத்தில் முதலிடம் கொடுத்தது எதனைக் காட்டுகிறது?

ப: "ஈழநாடும்" துரோகிகளின் கைக்குள் அகப்பட்டுக் கொண்டு விட்டதென்பதை!

❀

பி: மனோகரன்,
யாழ்ப்பாணம்.

கே: அடையாள அட்டையைப்பற்றி தமிழரசார் இன்னும் ஒரு முடிவையும் ஏன் வெளியிடவில்லை!

ப: அது பற்றி என்ன செய்ய வேண்டும் என்பதை பின்னர் ஒரு கட்டத்தில் தமிழரசார் அறிவிப்பார்கள் அடையாள அட்டையை இப்போது எடுக்க வேண்டாம் என்று அவர்கள் கூறவில்லை!

கே: வட, கிழக்கு மாகாணங்களுக்கு தமிழர் தங்கள் சொத்தைக் கொண்டு வரும்படி கூறிய தந்தை செல்வா, முன்மாதிரியாக தன்னுடை சொத்தை கொண்டு வருவாரா?

ப: அப்படிக் கொண்டுவரக் கூடிய பெரும் சொத்துக்கள் எதுவும் அவரிடம் இடையாது. அவர் கொழும்பில் வசித்துவருவது கூட வாடகை வீட்டில் தான்!

❀

எஸ். ஜே. வி. ராஜகுமார்
மாதகல்:

கே: மட்டக்களப்பு முதல்வர் இராஜதுரையைப் பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: ஒரு சிறந்த பேச்சாளர்

கே: தமிழரசுத் தலைமைச் செயலகம் அமைப்பதற்கு வேண்டிய நிதியைத் தொடக்கினைத்து நடவடிக்கைகளை மேற் கொண்டால் என்ன?

ப: மிக விரைவில் உங்கள் ஆசை நிறைவேறும்!

கே: அரசியல் திட்டத்தை எதிர்த்து தமிழரசுக்கட்சிப் போராட்டம் நடத்துமா?

ப: நிச்சயமாக!

> வெட்டிஒட்டப்பட
> வேண்டிய முகவரி—
> திருவாளர் குயுக்தியார்,
> மே/பா சுதந்திரன்
> 194, ஏ- பண்டாரநாயக்கா வீதி
> கொழும்பு—12

# புத்தாண்டே வா!

—விசுவநாதன் தாமோதரம்பிள்ளை.

ஆதவன் உதித்திட ஆம்பல் மலர்ந்திட,
ஆயினம் மகிழ்ந்திட ஆறுகள் செழித்திட,
ஏழைகள் களித்திட எந்தர்கள் ஒழிந்திட,
ஒரிகள் ஓங்கிட ஏழ்மை நீங்கிட,
விறங்க வரும் ஆண்டே நீவா!

இன்னல் ஒழிந்திட இன்பம் பொங்கிட,
இருப்பவை பெருகிட இல்லாமை மறைந்திட,
பஞ்சம் பறந்திட வஞ்சம் அழிந்திட,
கொஞ்சும் குமரியும் நெஞ்சம் குளிர்ந்திட
விளங்க வரும் ஆண்டே நீவா!

நாடு வாழ, நாட்டில் நன்மை வாழ,
ஏடு வாழ ஏட்டில் ஏற்றம் வாழ,
மாடு வாழ மாட்டின் மகிமை வாழ,
வீடு வாழ வீட்டில் விளக்கு வாழ,
விளங்க வரும் ஆண்டே நீ வா!

★

# சித்திரை வந்தனன்

'சர்வசித்தன்'

சித்திரைக் கன்னியென் சிந்தையில் வந்து பல்
வித்தைகள் செய்து விட்டாள்—நல்ல
வீரக் கதைகள் சொன்னாள்;
பத்தரை மாற்றுப் பசும் பொன்னின் மேனியாள்
சித்தம் குளிர வைத்தாள்—என்னை
இன்பத்தில் ஆழ்த்தி விட்டாள்;

தனித் தமிழ்க்கலை தாக முணர்ந்தவர்
எங்கும் நல் வாழ்வு பெற்றார்—தமிழ்
ஏட்டினை வாழவைத்தார்!
பொங்கும் நல்லின்பத்தைப் புகழில் மறந்தவர்
சங்கு முழக்குகிறார்—என்னும்
சாற்றைப் பிழிந்து தந்தாள்;

மற்றவர் கையையும் வாயையும் பார்த்தவர்
சுற்றவராகி விட்டார்—இன்று
கடமை(யை) உணர்ந்து விட்டார்;
உற்ற தமிழ்க் கலை 'வானில்' வளர்ந்திடில்
சுற்றமும் வாழு மென்ற—பெரும்
உண்மையைத் தேர்ந்து கொண்டார்!

''ஏட்டில் எழுதி இந்நாட்டைப் புதிதாக்கும்
வீட்டுக் கவிஞரெல்லாம்—'தமிழ்'
வீட்டினில் வாழுவதால்;
நாட்டில் இலக்கியம் நாலுவித கலை
போட்டியிட் டெழுகு தென்றாள்—இன்பப்
போதையை ஊட்டுதென்றாள்!

★

# சிரிக்கவா சொல்கிறாய் சித்திரையே!

—செ. குணரத்தினம்—

சித்திரைப் பெண்ணே நாங்கள்
சிரித்த நாள் நினைவிலில்லை!
உத்தரிக்கின்றோம் வாழ்வில்
ஓர் கொடித்துயரப்பட்டு!

அழுகின்றாள் தமிழ்த்தாய் இங்கே
அவள் நிலைமாறவில்லை!
அழுபவள் சிரிக்கும் நாளோ
அனைவரும் சிரிப்போமம்மா!

தங்கமே தமிழே தாயே
தமிழ் வீரச்சத்தை யூட்டி
எங்களை ஏன்தான் இந்த
ஈழத்தில் பிரசவித்தாய்!
சிங்களர் பதுங்கி வாழ்ந்த
சரித்திரம் படித்ததுண்டோ
அங்கங்கள் சிதறினாலும்
அடிமைபோல் வாழோம் தாயே!

சித்திரைப் பெண்ணே உந்தன்
சேவியம் முடியுமுன்பே
இத்தரை மீதிலெங்கள்
இன்னல்கள் மறையுமானால்
சத்தியமாக நாங்கள்
சித்திரை வருஷமுன்னை
எதிர்க்கும் வியக்க வாழ்த்தி
எழில் தமிழ் விழாவெடுப்போம்!

# 'மந்தைகள்' கூடுகின்றன

சென்ற பல ஆண்டுகளாக வெவ்வேறு திசைகளில், வெவ்வேறு தோற்றங்களில், பலவித முகமூடிகளுடன் இயங்கி வந்த (பலசந்தர்ப்பவசத்தால் இயங்காது முடங்கியிருந்த) முற்போக்குகள் மீண்டும் அணிசேரப் போகின்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசியல் ஆட்சிபீடத்தில் நிற மாற்றம் ஏற்படும் போதெல்லாம் தங்கள் நிறத்தையும் மாற்றிக்கொள்ளும் இப்பச்சோந்திமுற்போக்குகளை ஒன்று சேர்க்கும் கைங்கரியத்தை நிறைவேற்றுவதில் முற்போக்கு வாரஏடு ஒன்றே பெரிதும் பாடுபட்டு வருகின்றது; முற்போக்கு எழுத்தாளர்களை ஒன்று சேர்த்து ஒரே போக்கில் மேய்ப்பதற்குச் செயலாற்றி வரும் இப்பத்திரிகை, இம் மந்தைகளின் பட்டியாகத் தமது காரியாலயத்தை நல்க முன்வந்துள்ளது.

இம்முற்போக்குகள் ஒன்று சேரப் போவது குறித்து பொதுவாக இலக்கிய உலகில் மகிழ்ச்சியே தென்படுகிறது; ஏனெனில் இதுகால வரை இனங்கண்டு கொள்ள முடியாதிருந்த பல முற்போக்குகளை இனிமேல் இலக்கிய உலகம் இனங்கண்டு கொள்வதோடு மட்டுமன்றி விழிப்போடும் இருக்கலாமல்லவா?

வாருங்கள் முற்போக்காளர்களே! திரையை விலக்கிக்கொண்டு பயமின்றி முன்னுக்கு வாருங்கள்! வந்து உங்கள் [illegible] முழக்கம் என்னவாக இருக்கும் என்றும் எங்களுக்குத் தெரியும்! ''தேசிய ஒற்றுமைக்கு உழைக்கப்போகிறோம்'' என்றுதானே சொல்வீர்கள்? உங்கள் விதண்டாவாதங்களுக்கு அவ்வப்போது சாட்டைடதர நாமும் தயாராகவே இருக்கிறோம், வருக!

★

## முத்தான நூல்கள் மூன்று!

1 திறவாத படலை (நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்களது கவிதை விமர்சனம்)

## இலக்கிய உலகு

"வேதாளம்"

2 கதிர்களும் கோதிரமும் (அவையா னபதி நான்கு கட்டுரைகளின் தொகுதி)

3 ஈழத்து நூல் வழிகாட்டி (1955-70 வரை வெளிவந்த ஈழத்து நூல்களின் அட்டவணை)

மேற்படி மூன்று நூல்களும் அண்மையில் இரசிகமணி கனகசெந்திநாதன் அவர்கள் வெளியீட்டவையாகும். குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் ஈழகேசரிப் பொன்னையா நினைவு நாள் விழாவின் போது இவைகள் வெளியிடப் பட்டன.

தமது ஒரு நூலையே வெளியிட எழுத்தாளன் மிகவும் சிரமப்படும் இக்காலத்தில் இரசிகமணி போன்றவர்களால்தான் துணிந்து ஒரே சமயத்தில் மூன்று நூல்களை வெளியிட முடியும்; இலக்கியச் செல்வரான அவர் தமது உடல் நலம் குன்றிய நிலையிலும் இதற்காக உழைத்த உழைப்பை எண்ணும்போது அவரை நாம் பாராட்டவே வேண்டும்.

இரசிகமணியின் இந்த நூல்களை இனிமேல் விமர்சிக்கப் போகும் சில விமர்சனப் புலிகள் "இதெல்லாம் பழைய இலக்கியம்தானே" என ஒதுக்கக்கூடும்; அதற்காக அவரால் படைப்பிலக்கியம் படைக்க முடியாது என்றோ 'வெண்சங்கு' போல் இன்னொரு சிறுகதைத் தொகுதியை அவரால் இனிமேல் வெளியிட முடியாது என்றோ சொல்வதற்கில்லை.

இரசிகமணிக்கு எப்பொழுதும் தன்னலத்தைவிட பொதுநலனே மிகுதி! சோமசுந்தரப் புலவர் போன்றவர்களை நாட்டுக்கு நல்ல முறையில் அறிமுகம் செய்து வைக்க வேண்டும். ஈழத்து நூல்களை நம்மவர்கள் அறிந்து கொள்ள வழி செய்ய வேண்டும் — இப்படியாகத்தான் அவரது சிந்தனைகள் செல்வது வழக்கம். மேலே குறிப்பிட்ட மூன்று நூல்களும் இந்த வகையைச் சேர்ந்தவைகளே!

செந்தியின் முத்தான இந்த மூன்று நூல்களும் அவரது பெருமையை உயர்த்தத் தவறினாலும் எமது இலக்கிய உலகின் பெருமையை நிச்சயம் உயர்த்தவே செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய நண்பர்களின் பயனற்ற கூச்சல்!

அன்பு நண்பா,

ஈழத் தமிழினத்துக்கு மரணக் குழி தோண்டி மீளா அடிமைகளாக்கி அழித்தொழித்திட வழிவகுத்திடும் நயவஞ்சகத் திட்டமான புதிய அரசியல் திட்டத்துக்கு எதிராக தமிழ் மக்களிடையே எழுந்துள்ள எதிர்ப்பணியிலே ஒரு சிறிதும் ஓட்டை விழுந்திடலாகாது; அரசியல் சட்டத்துக்கு எதிரான கருத்துடையோரிடையே—தமிழினத்தின் விடுதலை விரும்பிகளிடையே—இனத்தின் விடுதலையை பெறுவது எப்படி என்பதிலும் இதற்கு பின்பற்றிட வேண்டிய வழி முறைகளிலும் கருத்து வேற்றுமைகள் இருந்திடினும், அரசியல் திட்டத்தை எதிர்த்திடுவதிலே கருத்துவேறுபாடு தோன்றிடக் கூடாது என்பதில் மிகவும் அக்கறை காட்டி வருபவன் நான். புதிய அரசியல் சட்டத்துக்கு விரோதமாக தமிழ் மக்களிடையே முண்டெழுந்துள்ள எதிர்ப்புணர்ச்சிக்கு எவ்வகையிலும் ஊறு நேர்ந்திடக் கூடாது; அரசியல் சட்டத்தை எதிர்ப்போரிடையே பிளவும் பூசலும் இருப்பதாகக் காட்டிக் கொள்ளக் கூடாது; என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து வருபவன் நான்.

ஆளுங்கட்சியின் இருக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும், புதிய அரசியல் சட்டத்தின் ஆதரிப்போரையும் கூட சற்றுக் காரசாரமாக கண்டிக்கிறேனென்றால், அவர்கள் மீது கொண்ட எந்த தனிப்பட்ட விரோதத்தினாலோ, கோபத்தினாலோ அல்ல—உண்மையில் அவர்களில் பலரை எனக்கு தெரியவும் மாட்டாது. ஆனாலும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கும் அவர்கள், தவறான வழியில் சென்று தமிழினத்துக்கு துரோகம் செய்கிறார்களே! இனமொழித் துரோகியென்று வருங்காலத்தில் இழித்தும் பழித்தும் இகழப் படப்போகிறார்களே; இவர்களும் தவறான பாதையைவிட்டு, சரியான வழிக்கு திரும்ப வேண்டும்; தமிழ் காக்கும் பேரணியில் தங்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்கின்ற தணியாத ஆசையினால்தான் அவர்களுக்கு சற்று உறைக்கக் கூடியதான இறுக்கமான வார்த்தைகளினால் கண்டித்திருக்கிறேன்.

அவர்கள் தங்கள் தமிழ் துரோகப் போக்கினைவிட்டு, தமிழ் இனவிடுதலைப்படையுடன் தம்மையும் இணைத்துக்கொள்ள முன்வருவார்களானால், எந்தப் பேனாவால் அவர்களைக் கண்டிக்கிறேனோ, அதே பேனாவால் வாழ்த்துக் கூறிடவும் தயாராக இருக்கிறேன். தமிழினம் ஒன்றுபடவேண்டும்; தனது விடுதலையை எவ்வளவு சீக்கிரத்தில் மீட்க முடியுமோ, அவ்வளவு சீக்கிரத்தில் மீட்கவேண்டும்; இது ஒன்றே நமது இலட்சியமாகும்!

புதிய அரசியல் அமைப்பினை எதிர்க்கும் இவர்—குறிப்பாக நம்மை விட்டுப் பிரிந்து தனிக்கடைகண்டோர்—நம்மைத் திட்டுவதிலும் கேலி செய்வதிலும் ஈடுபட்டிருந்த போதிலும்—நாம் மட்டும் பொறுப்புணர்வுடன் பொறுமை காத்து வந்தோம்.

நண்பா, வல்வையில் நடைபெற்ற ஒற்றுமை மாநாட்டைக் கண்டு உளம்பூரித்து உனக்கு முன்னர் ஓர் முறை நான் தீட்டிய மடலை மறந்திருக்கமாட்டாய்—'இவர்கள் மக்களால் ஒதுக்கப்பட்டவர்கள்; தேர்தலில் கட்டுப் பணத்தையும் இழந்தவர்கள்; இவர்களுடன் நாம் என்ன பேசிடுவது; என்கிற ஆணவப் போக்கு ஏதுமின்றி, அந்த ஒற்றுமை மாநாட்டில் நம் தமிழரசுக்கட்சியும் கலந்துகொண்டு ஒன்பது அம்சத்திட்டத்தை உருவாக்கி ஒற்றுமைக்கு வழி வகுத்தது!

அந்த ஒற்றுமைத்திட்டம் கையொப்பமிடப்பட்டு, அதன் 'மை' காயுமுன்னரே தங்கள் ஏட்டில் எமது இயக்கத்தையும் இயக்கத் தலைவர்களையும் கன்னா பின்னாவென்று திட்டத் தொடங்கிவிட்டார்கள் சுயாட்சிக் கழகத்தினர். இருந்தும் நாம் அமைதியை கடைப்பிடித்தே வந்தோம். புதிய அரசியல் சட்டத்தினை தமிழ்க்கட்சிகள் அனைத்தும் எதிர்க்கின்றன என்பதை ஆட்சியாளரின் கண்முன்னால் எடுத்துக்காட்டுவதொன்றே எமது நோக்கமாக இருந்தது!

இதுதான் போகட்டும் நண்பா, அண்மையில் அரசியல் சட்டத்துக்கு எதிராக யாழ்ப்பாணம் சரசுவதிமண்டபத்தில் ஒரு கருத்தரங்கினை மொழிவழித் தொழிற் சங்கங்கள் அனைத்தும் கூட்டாக நடத்தின அல்லவா? தமிழ் மக்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பினை எடுத்துக் காட்டிட கூட்டப்பட்ட அந்த கருத்தரங்கிலேயே கூட சுயாட்சிக் கழகத்தின் பெருந்தலைவர் மதிப்புக்குரிய நவரத்தினம் தமிழரசுக் கட்சியைப்பற்றி கேலியும் கிண்டலும் செய்து பேசியதாக நான் தமிழ் நாட்டிலிருந்து திரும்பிய பின்னர் நண்பர்கள் கூறிடக்கேட்டு மனவேதனைப்பட்டேன்.

விரக்தியடைந்த அரசியல்வாதிகள் நிலை வேதனைக்குரியதுதான். ஆயினும் அந்த விரக்தியை இனத்தின் ஒற்றுமைக்கு ஊறுசெய்யும் அளவுக்கு தனக்குள்ளே வளரவிடுபவன் முதிர்ச்சிபெற்ற தலைவனாக இருக்கமுடியாது!

சுயாட்சிக் கழகத்தார் நம்மைவிடத் தாமே தீவிரவாதிகள் என்று இளைஞர்களை நம்பவைத்து தம்பக்கம் இழுத்திட படாத பாடுபட்டு வருகின்றனர் என்பதை நான் அறிவேன்; அவர்கள் உண்மையிலே தீவிரவாதிகளாக இருந்தால், நமது இயக்கத்தை தாக்குவதில் தீவிரவாதத்தைக் காட்டுவதை விடுத்து இனத்தின் விடுதலைக்காக போராடுவதிலே தமது தீவிரவாதத்தை காட்டட்டுமே!

ஒரு விடுதலை இயக்கம் எதை வெளிப்படையாகக் கூறமுடியும்; எதைக் கூறக்கூடாது; எதை எந்தச் சூழ்நிலை

## அரசியல் மேடை

யில் எந்தச் சந்தர்ப்பத்தில் எப்படிச்செய்ய வேண்டும்; என்பதெல்லாம் எமக்குத் தெரியும். காலம் கனியும்வரை காத்திருக்கவேண்டும் என்பதையும் நாம் அறிந்து வைத்திருக்கிறோம்.

நமது போராட்டங்கள் அஹிம்சை முறையிலேயே நடைபெறும்; பலாத்காரத்தில் துளியும் இறங்கமாட்டோம்; இறங்க நமது இளைஞர்களை அனுமதிக்கவும் மாட்டோம்; அதே வேளையில் சாத்வீக வழியில் எவ்வளவு தீவிரமாக போராட முடியுமோ அவ்வளவு தீவிரமாக எமது இனத்தின் விடுதலைக்குப் போராடுவோம் — என்று நமது இயக்கம் திட்டவட்டமாக கூறிவருகிறது.

இன்றையசூழ்நிலையில் இதைவிட தீவிரமாக இயங்கும் வேறு வழிமுறைகள் நம்மைவிட்டுப் பிரிந்தோரிடையே இருக்குமானால் அதை வெளி வெளியாக அறிவிக்கட்டும்! செயல்படுத்தட்டும்! 'தீவிரவாதிகள்' என்று தடிப்பதால் மட்டும் இளைஞர்களை ஏமாற்றிவிட முடியாது!

இந்திய சுதந்திரப் போருக்கு காந்தியடிகள் காட்டிய வழி தமக்கு உடன்பாடானதாக இருக்கவில்லையென்றதும் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் தனியே பிரிந்து சென்று தன்பாட்டில் இயங்கினாரே தவிர காந்தியின் தலைமையையோ, காங்கிரஸ் இயக்கத்தையோ திட்டிக்கொண்டிருக்கவில்லை! நம்மை விட்டுப் பிரிந்தோர் உண்மையில் தீவிரவாதிகளாக இருந்தால் நேதாஜியை பின்பற்றலாமே!

நண்பா இந்தக் கிழமை இவர்களைப் பற்றி நான் எழுதத்தொடங்கியதற்கு முக்கிய காரணம் ஒன்றுண்டு. புதிய அரசியல் திட்டத்தை நிராகரித்திருக்கும் தமிழரசுக் கட்சியினர் புதிய அரசியல் திட்டத்தின் கீழ் ஏற்படவிருக்கும் தேசிய சபையையும் (அதாவது நாடாளுமன்றத்தை) புறக்கணிப்பார்களா? இந்தக் கேள்வியை ஆளுங் கட்சியுடன் ஒட்டியிருக்கும் தியாகராசா மாத்திரமல்ல — சுயாட்சிக் கழகத்தாரும் ஒரு பெரும் பிரச்சினையாக்கி வருகின்றனர்; தேசிய சபையில் தமிழ் பிரதிநிதிகள் பிரதிநிதித்துவம் வகிக்கக் கூடாதென்று பிரசாரம் செய்து வருகின்றனர்! தமிழரசுக் கட்சியினருக்கு நாடாளுமன்ற நாற்காலிகளே முக்கியமானதென்றும் தூற்றிவருகின்றனர்!

தேசியசபையைப் பொறுத்தவரை எப்படி நடத்துகொள்வது என்பது குறித்து நமதுகட்சி [illegible] ஓர் முடிவெடுத்திடாத போதிலும், தேசிய சபையை [illegible] தமிழரசுக் கட்சி முற்றாக நிராகரித்திடுவது இனத்துக்கு நன்மை தரக்கூடியதல்ல வென்பதே எனது கருத்தாகும்.

தமிழ் பேசும் மக்களிடையே நாற்றுக்கு நூறுவிதம் ஒற்றுமையிருந்தால்-தமிழ்ஈழத்தின் அனைத்துத் தொகுதிகளிலிருந்தும் ஒருவர் கூட பொதுத்தேர்தலில் போட்டியிட முன்வராது—புறக்கணித்திட முன்வருவார்களானால்—தேசிய சபையை பகிஷ்கரிப்பது நமது எதிர்ப்பை ஓரளவு தெரிவிப்பதாக இருக்கலாம்; இன்றைய நிலையில், தேசிய சபையை தமிழரசுக் கட்சியின் 12 நாடாளுமன்ற உறுப்பினர்களும் நிராகரித்தாலும் கூட —ஏழு தெரிவு செய்யப்பட்ட தமிழ் உறுப்பினர்கள் அங்கே இருக்கத்தான் போகிறார்கள்.

அரசியல் நிர்ணய சபையைப் புறக்கணிப்பதையும் தேசிய சபையை புறக்கணிப்பதையும் ஒன்றாக கருதமுடியாது; தமிழ் இனத்தின் மரண சாசனமாக அமையவிருக்கும் புதிய அரசியல் திட்டத்தை தயாரிப்பதில் உங்களுடன் ஒத்துழைக்கமாட்டோம் என்பதை எடுத்துக்காட்டவே அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளிநடப்பு செய்தோம்!

தேசிய சபைக்கு செல்வது—சிங்கள இனம் தனது பெரும்பான்மை பலத்தை உபயோகித்து— தமிழ் இனத்தை அழித்தொழித்திடும் புதிய அரசியல் திட்டத்தை உருவாக்கியிருந்தாலும் அதைத் தமிழினம் ஏற்க மாட்டாது; தொடர்ந்து எதிர்த்து போராடி தமிழ்ஈழத்தின் தன்னாட்சியை நிறுவியே தீரும் என்பதை ஆட்சியாளருக்கும் அகில உலகுக்கும் அறிவிக்கும் நோக்கத்துடன்தான்!

ஆம், தமிழின விடுதலைப் போராட்டத்தை அகில உலகத்துக்கும் எடுத்துரைக்கும் பிரசார மேடையாக தேசிய சபையை தமிழரசுக்கட்சி பயன்படுத்திட வேண்டும் என்பதே எனதுகருத்தாகும்!

இந்த ஒரு நோக்கத்துக்காக மட்டும் கட்சி உறுப்பினர்கள் தேசிய சபையைப் பயன்படுத்தலாம்-மற்றப்படி தேசிய சபையின் நடவடிக்கைகளை கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணிக்கவேண்டும் என்பதே எனது கருத்தாகும்.

பொதுத்தேர்தலில் போட்டியிடுவது—தேசிய சபைக்கு செல்வது—பின் அதைப் பகிஷ்கரித்திடுவது —மீண்டும் இடைத்தேர்தல் நடத்த வைப்பது-போட்டியிடுவது-என்று இப்படி 'பகிஷ்கரிப்பு' இயக்கத்தை நடத்திடலாமெனக் கூறுவதும்பயனற்றதாகும். இது மக்களின் சக்தியைவீணே தேர்தல்களில்விரயமாக்குவதாகவே முடியும்; இன விடுதலைக்கும் எவ்விதத்திலும் பயன் தராது!

இப்படியொரு திட்டத்தில் அனைத்துத் தமிழ்க்கட்சிகளும் இணைந்து நின்றாலும் கூட தமிழ் மக்களிடையே இருக்கும் இடது சாரிகளும், அரசாங்க எடுபிடிகளும் கைக்கூலிகளும் தேர்தலில் போட்டியிட்டே தீருவர்; எனவே போட்டியும், பிரிவும் மக்கள் சக்தி விரயமாகுவதுமே இதனால் கிடைக்கும் பயனாக இருக்கும்!

என்னைப்பொறுத்த வரை, தேசிய சபைக்குள் விடுதலை வீரர்கள் நுழைவதின் மூலம் தமிழ்த் துரோகிகள் அங்கு நுழைவதை தடுத்து நிறுத்தும் அதே வேளையில் தேசியசபையை நமது இனவிடுதலைப் போராட்டத்தின் பிரச்சார மேடையாக மட்டும் பயன்படுத்திக்கொண்டு, தேசிய சபைக்கு வெளியே விடுதலைப் போராட்டத்தினை நடத்திடுவதே சாலச் சிறந்தது என்று கருதுகிறேன்.

விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்டிருப்போரில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இருந்து—அவர்கள் மீதும் அடக்கு முறை அள்ளி வீசப்பட்டால் உலக நாடுகளின் கண்கள் நம்மீது திரும்புவதற்கு அது தூண்டுகோலாக இருக்கும்!

புதிய அரசியல் திட்டத்தை நிராகரித்து விட்டு — புதிய அரசியல் அமைப்பின் கீழ் உருவாகும் தேசிய சபையில் அங்கம் வகிப்பது சரியாகுமா என்று கேட்பீரேல், அரசியலில் அது ஒன்றும் தவறில்லை என்பேன்!

வெள்ளைக்கார ஆதிக்கத்தை எதிர்த்த இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் சுதந்திரப்போராட்ட காலத்தில் பிரிட்டிஷ் மன்னருக்கு விசுவாசமாக சத்தியம் செய்துகொண்டு சட்டசபைக்குள் நுழைந்து — அங்கு இருந்துகொண்டே 'வெள்ளையனே வெளியேறு' என்ற கோஷம் எழுப்பவில்லையா?

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எண்ணம்**

# வருக புத்தாண்டே!

குளிரும் கூதலும், பனியும் பிணியுமாக இருந்த காலம் முடிவடைந்து, இளவேனிற் காலம் மலர்ந்திருக்கிறது.

ஆம், 'விரோதிகிருது' போயொழிய 'பரிதாபி' ஆண்டு பூத்திருக்கிறது!

'விரோதி கிருது' ஆண்டு வீண் ஆண்டாகப் போய்விடவில்லை. வச்சிர உள்ளத்துடன் அடிமைத் தனத்தை எதிர்த்துப் போராடிய வங்க மக்களுக்கு சுதந்திர வாழ்வை பெற்றுக்கொடுத்தன் மூலம் உலகில் எங்கெங்கெல்லாம் அடிமைத்தனத்துக்கு எதிராக மக்கள்போர்க் கொடி உயர்த்தி வருகிறார்களோ அவர்களுக்கெல்லாம் எழுச்சியையும் புதிய வேகத்தையும், நம்பிக்கையையும் தந்து விட்டுத்தான் 'விரோதிகிருது' ஆண்டு விடைபெற்றுச் சென்றிருக்கிறது!

பூத்திருக்கும் 'பரிதாபி' ஆண்டோ, பெயருக்கேற்றபடி பரிதாபமான ஆண்டாகத்தான்— இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை இருக்கப்போகிறது என்பதில் துளியும் ஐயமில்லை—

இந்த ஆண்டில் தான், இந்நாட்டுத்தமிழினத்தை மீளா அடிமைப்படுகுழியில் தள்ளி—அழித்தொழிக்கும் நயவஞ்சக சிங்கள பௌத்த ஒற்றையாட்சி அரசியல் திட்டம் அரங்கேற்றப்பட விருக்கிறது.

தமிழ்பேசும் மக்களின் தூக்குக் கயிறுன புதிய அரசியல் திட்டம் நடைமுறைக்கு வரப்போவது இந்தப் புதிய ஆண்டில்தான்! எனவேதான் தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரை 'பரிதாபி' ஆண்டு பரிதாபத்துக் குரிய ஆண்டு என்று கூறினோம்.

இந்தப் பரிதாபி கொண்டு வரவிருக்கும் பரிதாப நிலையிலிருந்து நாம் மீட்சிபெற வழியென்ன? தமிழினம் இந்நாட்டில் அடிமைத்தளையை அறுத்தெறிந்து விடுதலைபெற வழியென்ன?

## துணிக்கை

'விரோதி கிருது' தந்த அந்த நம்பிக்கையுடன், "புத்தாண்டே வா!" என்று பூத்திருக்கும் பரிதாபி ஆண்டுக்கு வரவேற்பு நல்கி அடியெடுத்து வைப்போம்!

காங்கிரஸ் எம்.பி.கள் மூவரும் தமிழ் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் மேலே உள்ளன. இவைகளில் எதுவும் புதிய அரசியல் அமைப்பில் இடம் பெறவில்லை. புதிய அமைப்பில் சிங்களம் அரசகருமமொழி, கோட்டுமொழி: பௌத்த சமயம் அரசாங்க மதம், பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்களை எதிர்த்து சிறுபான்மையினர் வழக்கு தொடர முடியாது, செனற் சபை இருக்காது, நியமன எம். பிகள் இருக்கார், தமிழ் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளில் எதையும் அரசியல் அமைப்பில் காங்கிரஸ் எம்.பிகள் வற்புறுத்த வில்லை: தமிழரின் அடிப்படை உரிமைகள் எதையும் அரசிடம் கேட்கவில்லை.

தமிழ் காங்கிரஸ் பிரேரணைகளை அரசியல் அமைப்பு சபையில் பிரேரிக்காது, எழுந்து நின்று பிரேரணைகள் அனைத்தையும் வாபஸ் பெற்றனர்; தமிழ் மக்களுக்கு குறிப்பாக நல்லூர், வட்டுக்கோட்டை, கிளிநொச்சி வாழ் மக்களுக்கு துரோகம் புரிந்து விட்டனர்; புறமுதுகிட்டோடியால் ஓடி விட்டனர், ஏமாற்றி விட்டனர்.

காங்கிரஸ் எம்.பிகளின் அரசியல் போக்கு தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு புலப்படவில்லையா? காங்கிரஸ் ஆதரவாளர்கள், காங்கிரஸ் கிளைகள், காங்கிரஸ் பொதுச்சபை, காங்கிரஸ் நிர்வாக சபை, அனைத்தும் மௌனம் கொள்வது ஏன்? செயல்படாதிருப்பது ஏன்?

தமிழ் காங்கிரஸ் எம்.பிகள் மூவரும் தமிழ் மக்களின் விருப்பத்துக்கு மாறாகவும், கட்சியின் கொள்கைக்கு விரோதமாகவும், கட்சி கட்டுப்பாட்டை மீறி செயல்படுகின்றனர் என்பது கட்சிக்கும் இயங்காது: ஆகையினால் காலகதியில் காங்கிரஸ் செத்துவிடும்: காங்கிரஸ் பிரமுகர்களும் பல கட்சிகளிலும் தங்களை இணைத்துக் கொள்வர். இதுதான் உண்மையில் நடக்கப்போவது:

காங்கிரஸ் கட்சியின் பலவீனம், கட்சியின் இயலாமை அனைத்தும் கட்சி எம்.பிகளுக்கு தெளிவாகிவிட்டது: இதனால் காங்கிரஸ் என்ற மூடியுடன் சுதந்திரக் கட்சி எம்.பி. போல் செயல்படுகின்றனர். காங்கிரஸ் கட்சி அரசியல் திட்டத்தை எதிர்க்கின்றது: ஆனால் கட்சி எம்.பிக்கள் அரசியல் திட்

'தமிழரசி'

டத்தை ஆதரிக்கின்றனர். இந்நிலையில் கட்சி எம்.பி.கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டியது கட்சியின் கடமை; இதை கட்சி செய்யுமா?

தமிழ் காங்கிரஸ் கட்சி தனது எம்.பி.கள் மீது நடவடிக்கை எடுத்தால் என்ன எடுக்காவிட்டால் என்ன, சகல தமிழ் மக்களும் புதிய அரசியல் திட்டத்தை எதிர்க்கின்றனர். இந்நிலையில் நல்லூர், வட்டுக்கோட்டை, கிளிநொச்சி தொகுதி எம்.பி.கள் மூவரும் தொகுதி மக்களின் விருப்பத்துக்கு மாறாக அரசியல் திட்டத்தை ஆதரிக்கின்றனர். தங்களை தெரிவு செய்த மக்கள் விரும்பினால் என்ன விரும்பாவிட்டால் என்ன அரசியல் திட்டத்தை ஆதரிப்போம் என்று அறிக்கைக்குமேல் அறிக்கைகள் விடுகின்றனர். அரசியல் அமைப்பை ஆதரித்து கருத்தரங்குகளையும், பொதுக்கூட்டங்களையும் நடத்துகின்றனர். அரசியல் திட்டத்தை ஆதரித்து வாக்களிப்போம் கின்றது. தமிழ் மக்களும் தொகுதி மக்களும் செய்ய பல விடயங்கள் உண்டு:

1. காங்கிரஸ் பிரமுகர்கள், காங்கிரஸ் கட்சி கிளைகள், காங்கிரஸ் வாக்காளர்கள் எம்.பி.கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க தலைமைப் பீடத்தை வற்புறுத்த வேண்டும்:
2. உயர்திருமாணிக்கவாசகரை தலைவராகக்கொண்ட அரசியல் எதிர்ப்பு குழு, காங்கிரஸ் எம்.பி.களை பேட்டி கண்டு அரசியல் திட்டத்தை எதிர்க்கும்படி கேட்கவேண்டும்.
3. காங்கிரஸ் எம்.பி.களின் தொகுதிகளில் அரசியல் அமைப்பை எதிர்த்து பிரச்சாரம், கருத்தரங்கு, விவாதம் போன்றவைகளை நடத்தவேண்டும்:
4. காங்கிரஸ் எம்.பி.கள் தொகுதிகளில் இயங்கும் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் இயக்கங்கள் அரசியல் அமைப்பை எதிர்த்து பிரேரணைகளை நிறைவேற்றி, தங்களது எம்.பி.களையும் எதிர்க்கும்படி கோரவேண்டும்:
5. காங்கிரஸ் எம்.பி.களின் தொகுதிகளில் மக்களின் கையொப்பங்களை பெருவாரியாக பெற்று, தொகுதி பிரமுகர்களை ஒன்று திரட்டி எம்.பி.யை பேட்டி கண்டு அரசியல் அமைப்பைஎதிர்க்கும் வண்ணம் கேட்க வேண்டும்:
6. எம்.பி.யை அரசியல் திட்டத்தை எதிர் அல்லது ராஜினமா செய் என்று மக்கள் ஒரே குரலில் கோரவேண்டும்.

# வாக்குறுதிகளை மீறிவிட்டனர்

# வட்டுக்கோட்டை, கிளிநொச்சி, நல்லூர் பா. உக்கள்!

## புதிய அரசியல்திட்டத்தை ஆதரிக்காது

## இவர்களைத் தடுப்பது வாக்களித்தோர் கடமை!

சென்றதேர்தலில் தமிழ் காங்கிரஸ் வேட்பாளர்கள் மூவர் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டனர்; அவர்கள் மூவரையும் திரு. தியாகராசா என்றோ, திரு. அருளம்பலம் என்றோ திரு. ஆனந்த சங்கரி என்றோ தமிழ் மக்கள் கருதி வாக்களிக்கவில்லை. தமிழ் மக்கள் வாக்களித்தது தமிழ் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்கள் என்றும், தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை மற்ற எல்லா தமிழ்—சிங்கள கட்சிகளிலும் பார்க்க பேணிப்பாதுகாப்பர், தமிழரின் உரிமைகளுக்கு போராடுவர் என்றும் தமிழ் மக்கள் எண்ணினர். அதனால் தங்கள் வாக்குகளை கொடுத்து மூவரை தெரிவு செய்தனர்.

தமிழ் காங்கிரஸ் எம்.பி.க்கள் மூவரும் தமிழ் காங்கிரஸ் கட்சி சார்பில் தமிழ் மக்களுக்கு கொடுத்த தேர்தல் வாக்குறுதிகள் எவை? தமிழ் காங்கிரஸ் தேர்தல் விஞ்ஞாபனம் என்ன கொள்கைகளை தமிழ் மக்கள் முன் வைத்தது? அது தமிழ் மக்கள் முன் வைத்த வேலைத் திட்டங்கள் வருமாறு:—

1. அகில இலங்கையிலும் தமிழ்மொழிக்கு சம அந்தஸ்து
2. தற்பொழுது நிலவும் 28ம் சரத்தை பாதுகாத்தல்.
3. இந்து சமயத்தைப் பேணிப்பாது காத்தல்.
4. இந்து பல்கலைக் கழகம் அமைத்தல்
5. இந்திய அரசியல் அமைப்பிலுள்ள 14ம் சரத்தைபுதிய அரசியல் திட்டத்தில் இணைத்தல்
6. தாழ்த்தப் பட்ட மக்களின் பிரச்சினையை அகற்றல்:
7. பாராளுமன்றம் இயற்றும் சிறுபான்மை இன விரோத சட்டங்களை சிறுபான்மையினர் எதிர்த்து வழக்கு தொடருதல்.
8. ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படை உரிமை சாசனம் ஒன்றை புதிய அரசியல் திட்டத்தில் இணைத்தல்:
9. அகில இலங்கையிலும் தமிழர் தமிழில் அரசுடன் தொடர்புகொள்ளல்.
10. தாய்மொழியில் கட்டாய கல்வி;
11. மலைநாட்டு தமிழரின் பிரச்சினைகளை நீக்கல்
12. தமிழ்மொழியைக் கோட்டு மொழி ஆக்குதல்:
13. தமிழ் பிரதேசத்தின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல்.
14. படித்த தமிழ் வாலிபர்களின் வேலையில்லா திண்டாட்டத்தை அகற்றல்;
15. செனற் சபையை பாதுகாத்தல்;
16. தமிழ் பிரதேசத்தைப் பாதுகாத்தல்;

கும் பொன்னம்பலத்துக்கும் நன்கு தெரியும், தெரிந்தும், காங்கிரஸ் தனது எம். பிகள் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்?

தமிழ் காங்கிரஸ் என்ற கட்சி தமிழ் மக்களால் சாகடிக்கப்பட்டு விட்டது இன்று பொன்னம்பலம் சும்மா பொன்னம்பலம். பொன்னம்பலம் எம். பி. யாகாததினால் தமிழ் காங்கிரஸ் கட்சியும் இயங்கவில்லை. அன்று, பொன்னம்பலத்தின் நன்மை தீமைகளை பாதுகாப்பதே தமிழ் காங்கிரஸ் கட்சியின் நோக்கமாக இருந்தது: தமிழ் மக்களின் நன்மைகளை என்றும் காங்கிரஸ் பேணவில்லை. தமிழ் அரசியல் அரங்கில் பொன்னம்பலத்தின் முப்பது வருட அரசியல் திருவிளையாடல், கபட துரோக நாடகம் முற்றிற்று: பொன்னம்பலத்தின் சாம்ராஜ்யம் முடிவுற்றது: பட்டம் முடிவுற்றது. இன்று பொன்னம்பலம் கருதாப்பொருள்.

பொன்னம்பலம் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் தன்னை சந்தித்த காங்கிரஸ் பிரமுகர்களிடம் 'அரசியல் வேண்டாம் அப்பா. வேறு விடயம் பேசுங்கள்' என்று சொன்னார் என்று தெரியவருகிறது. செத்த கட்சிக்கு பொன்னம்பலம் உயிர் கொடுக்க விரும்பவில்லை; [illegible]

என்றும் பகர்கின்றனர்: தங்கள் முடிவை யாராலும் தடுக்கமுடியாது, மாற்றமுடியாது, என்றும் பலமுறை சொல்லிவிட்டனர்;

இந்நிலையில் காங்கிரஸ் எம்.பி.க்கள் மூவரையும் ஆதரித்த மக்கள் என்ன செய்யலாம்? என்ற கேள்வி எழு

காங்கிரஸ் எம்.பி.களின் கையொப்பம் அரசியல் திட்டத்தில் எப்படியும் இடம்பெறாது பார்க்க வேண்டியது ஒவ்வொரு நல்லூர், கிளிநொச்சி, வட்டுக்கோட்டை வாழ் தமிழ் மக்களின் கடமை — இலட்சியம் —குறிக்கோள்!

## 'புங்குடுதீவு மக்கள் கோழைகளல்ல, இதையறிவீர் எட்டப்பர் கூட்டமே!'

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில உடனடியாகச் சிங்கள ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடைபெற்று வரும் சூழ்ச்சிகளை இங்குவாழ் தமிழ்ப்பேசும் மக்கள் அறிந்து கொதித்து எழும்பியுள்ளார்கள் இதைக்கண்டு நடுங்கும் எட்டப்பர் கூட்டத்திற்கு அனைத்து இலங்கைத் தமிழ்ப்பேசும் மக்களின் சார்பில் ஒருசில புத்திமதிகளை கூறவேண்டியவனாய் உள்ளேன்.

### பதவி வெறியா?

பதவி உயர்வு ஆசையா? அன்றி உங்கள் இனபந்துக்கள் யாராவது சிங்களத் தகுதியோடு வேலை தேடுகின்றார்களா? இல்லையேல் அரசியல் குத்துக்கரணம்போட முற்படுகின்றீர்களா? மூப்பு ... ஏகாக்கார வேகவைக் காட்டிக் கொடுத்த யூதாஸின் இடத்தைக் கைப்பற்றப் பார்க்கின்றீர்களா? எது உங்களுக்கு மனநிறைவோ அதைச் செய்து அதற்கான பரிசில்களை தமிழ்பேசும் மக்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளுங்கள்!

சிங்கள ஆசிரியர் தேவை என்ற வழியில் இருந்துமாறிச் செல்லாவிடில் முழுத்தீவுமே சீறி எழுந்துவிடும். இது எனது கூற்றல்ல என்னைற்ற தமிழ் இளைஞர்களின் ஒரே கருத்து என்பதையும் மறந்துவிடவேண்டாம்.

—நீவகன் - பஞ்சு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரிடம் ஆட்சேபித்திருக்கிறது. சிங்களத்தேர்ச்சி இல்லாதவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப் படக் கூடாதென்று அமைச்சர் கட்டளையிடவேண்டுமென்று 'இந்த அவிச்சங்கம் கேட்டிருக்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பற்ற...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவந்திருக்கின்றாய் அங்கு மலிந்து காணும் களவுகளுக்கும், ஊழல்களுக்கும், பொருள்கள் குறைந்துபோவதற்கும் உன்னால் நியமிக்கப்பட்டிருப்பவர்களே காரணம். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஏன் தயங்குகின்றாய்? திரு. தியாகராசா அவர்களே நீரும் இதற்கு உடந்தையா?

காரைநகர் வடக்குக் கிராமச்சங்கத் தலைவரின் வலைக்குள் நின்று வட்டமிடும் நீங்கள் காரைநகரை ஏன் இந்தக் கீழ் நிலைக்குகொண்டு வரமுயல்கின்றீர்கள்.''

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தியாகரின் திரைமறைவு நடவடிக்கைகள் பலவற்றை அம்பலப்படுத்தியுள்ளார் திரு. கனகசபை.

அவரின் கடிதத்தைக்கண்டு குலைநடுக்கம் பிடித்து ஊரை விட்டு ஓடித்திரிகிறாராம் கரவடித் தியாகர்: கரவடித்தியாகரின் பெயரில் காரைநகரில் நடைபெறும் அநீதிகளைப் பொறுக்கமுடியாத பொதுமக்கள் பொங்கியெழுந்துள்ளனர். இதைக் கண்டு பயந்தே தமது மனைவியை மலேசியாவுக்கு தியாகர் அனுப்பிவிட்டதாக பேசப்படுகிறது.

—

## ...ம்ட்டக்களப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் உபயோகப் பிரதேசம் என அரசாங்கத்தால் ஒத்துக்கொள்ளப்பட்ட தமிழ் மாகாணத்தில் உள்ளது;

4. முதலாந்தரத் தலைமையாசிரியர்களுக்கும் அவ்வப் பகுதிப் பிராந்தியக் கல்வி அத்தோர்களால் (மட்டக்களப்புக் அத்தோர் உட்பட) தமிழிலேயே நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

5. கொழும்பிலிருந்து கல்வியமைச்சு அனுப்பும் கடிதங்களில் கூடத் தமிழும் இடம் பெற்றுள்ளது.

மேற்கூறப்பட்டவை போல் பல நியாயங்கள் இருந்தும் தமக்கு வழங்கிய நியமனக் கடிதங்களை தமது ஊர்க்கந்தோர் சிங்களத்தில் வழங்கக் காரணம் என்ன என்று கேட்கிறார்கள் தமிழ் ஆசிரியர்கள்.

## விடைத்தாளில் தரப்படுத்தல் என்றால் வினாத்தாளிலுமா?

தமிழ் மாணவர்களின் விடைத்தாளின் புள்ளிகளைத்தான் இந்த சோசலிச அரசாங்கம் தரப்படுத்துகிறது என்று பார்த்தால், வினாத்தாளையும் அல்லவா தரப்படுத்திப் பரீட்சித்துப்பார்க்கிறது!

இம்மாதம் 15ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் க. பொ. த. (உயர்தர) பரீட்சையின் விஞ்ஞான பாடங்களுக்கான பாடத்திட்டம் இம்முறை மாற்றப் பட்டுள்ளது. இதற்காக கல்விப் பகுதி இந்த பாடத்திட்டத்திற்கு அமைய ஒரு மாதிரி வினாப்பத்திரம் தயாரித்து எல்லாப் பாடசாலைகளிலும் ஒரு பரீட்சையை கடந்த வாரம் நடாத்தியது.

இதில் சிங்கள மொழி மூலம் விடை எழுதும் மாணவர்களுக்கு தவ்லரகமான கடதாசியில் வினாக்களை அச்சிட்டு வழங்கியது: ஆனால் தமிழ்மொழி மூலம் விடை எழுதும் எமக்கு குறைந்த ரகமான கடதாசியில் வினாக்களை பிரதி செய்து அதுவும் வரிக்கு வரி பல சொற்களை பிழையாகவும் எழுத்துக்கள் விளங்காமலும் பிரதி செய்து எமக்கு தரப்பட்டது. இதனால் தமிழ் மாணவர்களாகிய நாம் விடையளிக்க பெரும் சிரமத்திற்குள்ளானோம். இதன் மூலம் சோசலிச அரசாங்கம் தனது அயோக்கியத்தனத்தைக் காட்டி விட்டது.

இது கொழும்பில் உள்ள பாடசாலைகளில் மட்டுமல்ல பிற இடங்களிலும் நடைபெற்றுள்ளது. இம் மாதம் நடைபெறவிருக்கும் பரீட்சையிலும் இப்படியாக நடைபெறாமல் இருக்கவேண்டுமென்பதற்காக இதை சுதந்திரன் மூலம் தெரியப்படுத்துகின்றேன்.''

— இவ்வாறு அக்குவைனாஸ் பல்கலைக்கழக கல்லூரியைச் சேர்ந்த மாணவர் கா. குகதாசன் சுதந்திரனுக்கு எழுதியுள்ளார்.

## தமிழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுவிட்டதாக அறியப்படுகிறது.

இதைவிட, பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன் ஆகியோர் எழுதிய பல பாடல்களுக்கும் கே. பி. சுந்தராம்பாள், சீர்காழி கோவிந்தராஜன் போன்றோரின் இசைத் தட்டுகளுக்கும் தடைபோடப்பட்டுள்ளதாகவும், இப்பாடல்கள் பெரும்பாலும் தமிழைப் பற்றியும் முருகனைப்பற்றியும் பாடப்பட்டவையென்றும் அறியவருகிறது —

## சனநாயகக் நீதிபதியும் உடந்தை!

முன்னாள் நீதிபதியொருவரும் 'கொலை' யொன்றுக்கு உடந்தையாக இருந்த அதிசயம் இலங்கையில் சென்ற வாரம் நடைபெற்றிருக்கிறது!

வேறொன்றுமில்லை...... சனநாயகத்தையும் நீதிமுறையையும் 'கொலை' செய்யும் குற்றவிசாரணை நீதிக்கமிஷன் மசோதாவுக்கு ஆதரவாக முன்னாள் நீதிபதியும்

## 'கொலைக்கு'

சட்டநிபுணரும் ராஜ் பாதுஉடமான திரு. எச். எச். மாட்டின் வாக்களித்திருப்பதைத்தான் இப்படிக் குறிப்பிடுகிறோம்.

அறப்படித்தவர்களும் கூழ்ப்பானைக்குள் விழும் அதிசயத்தை இங்கே தான் காணுகிறோம்! பதவி ஆசை மனிதனை எப்படியெல்லாம் ஆட்டிப்படைக்கிறது!

—

## கொழும்பு மகளிர் கல்லூரி கலைவிழா

உண்மையில் பெரியவர் செல்லச அவர்களின் குடும்பம் ஓர் கலைக்குடும்பம்தான்: பாட்டாவுக்கு கர்நாடக சங்கீதத்தில் ஈடுபாடு அதிகமென்றால் நாங்கள் மட்டும் கலைத்துறையில் குறைந்தவர்களா என்ன என்று கேட்பது போல செல்வாவின் பேத்திகள் தர்ஷனி வில்சன், கலாகினி வில்சன், மல்லிகை வில்சன் ஆகியோர் சக்கைப்போடு போட்டுவிட்டார்கள் கொழும்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கலைவிழாவின்போது.

பின்னல் கோலாட்டத்தில் தர்ஷனியும் கலாஷினியும் பங்குபற்றி சிறப்பிக்க, நவீன இராமாயணத்தில் தாசரவேடம் தாங்கி செல்வி மல்லிகை அபாரமாக நடித்தார்.

வீணை, வயலின், ஜலதரங்கம், புல்லாங்குழல், மணிப்புரி நடனம், பதம், தில்லானா, பின்னல் கோலாட்டம், கதகளி, அறுவடை நடனம், வில்லுப்பாட்டு, குறவஞ்சி நடனம் என்று இப்படி பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றிய மாணவிகள் கூடியிருந்தோரை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினர்.

'போகிற போக்கில்' 'நவீன இராமாயணம்,' 'கல்யாண சோடினை' ஆகிய நாடகங்களில் பங்குபற்றிய சிறுமிகள் 'கடுகு சிறிது காரம் பெரிது' என்பது போலக் கலை சொட்ட தங்கள் திறமையை காட்டி அனைவரையும் குலுங்க குலுங்க சிரிக்க வைத்தனர்.

கொழும்பில் இப்படியொரு கலைவிழாவை நடத்திக் காட்டிய மகளிர் கல்லூரி தமிழ் மாணவிகள் சங்க நிர்வாக குழுவினர் பாராட்டுக்குரியவர்கள்.

## அட மண்டு தினபதியாரே!!

''அமெரிக்காவின் தற்போதைய உப ஜனாதிபதி ஹியூபேர்ட் ஹம்ப்ரி''

—இப்படி யெழுதியிருக்கும் அதிவேக பூரணகுரு யார் தெரியுமா? சாட்சாத் தினபதியாரே தான்! 11-4-72 தினபதியில் இப்படி எழுதியிருக்கிறார்:

அட மண்டு தினபதியாரே! உமக்கு அமெரிக்காவின் தற்போதைய உப ஜனாதிபதி யார் என்பது கூடத்தெரியாமலிருப்பது குறித்து நாம் ஆச்சரியமடையவில்லை! அரசியல் அறிவில் நீர் ஒரு பூச்சியம் என்பதை நாம் அறிவோம்:

P. T. C. தந்த ஆங்கிலச் செய்தியை தமிழில் சரியாக மொழி பெயர்க்கவுமா புரியவில்லை?

## கதிரவேற் பிள்ளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாவும், நாவலர் அமிர்தலிங்கமும் தமிழகம் சென்று இலங்கைத் தமிழர்களின் நிலையை எடுத்து விளக்கிய நடவடிக்கையை தமிழரசுச் செயற்குழு பாராட்டியதோடு எவ்வித தயக்கமுமின்றி ஒரேமனதாக அங்கீகரித்தது.

கட்சியின் அடுத்த வருடாந்த மாநாட்டை அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டதும் போதிய முன்னறிவித்தல் கொடுத்து இனி நெருக்கடிலேயே நடத்துவதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

இந்திய முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் இஸ்மாயில் சாஹிப் அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் செயற்குழுவில் தீர்மானம் நிறைவேறியது.

அடுத்த செயற்குழுக் கூட்டத்தை கல்முனையில் மே 6, 7ம் திகதிகளில் நடத்துவது எனவும் முடிவுசெய்யப்பட்டது.

கூட்டத்துக்கு மூதூர் திரு. ஜேக் டி வாஸ் தலைமைவகித்தார்.

## அரசியல் மடல்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அயர்லாந்து விடுதலைப்போராட்டத்தின் போது பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் பிரிட்டிஷ் அரசுக்கு விசுவாசமாக சத்தியப் பிரமாணம் செய்து உறுப்பினராகி — உள்ளே சென்றதும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக 'சின்பீன்' இயக்க வீரர்கள் முழங்கவில்லையா?

உலக நாடுகளில் நடைபெற்ற — நடைபெற்று வரும் விடுதலைப்போராட்டங்களை எடுத்துக்கொண்டால் இது ஒன்றும் புதுமையானதல்ல. ஏன் சோல்பரி ஒற்றையாட்சி அரசியல் திட்டத்தை எதிர்க்கும் தமிழரசுக் கட்சி அதே சோல்பரி திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு 25 ஆண்டுகளாக இயங்கி வரும் இன்றைய நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்து வரவில்லையா? இன்றைய சுயாட்சித் தலைவர் நவரத்தினமும் நம்மோடு இருக்கும் வரை நாடாளுமன்ற உறுப்பினராகத் தானே இருந்தார்? அதன் பொருள் நவரத்தினமோ தமிழரசுக்கட்சியோ சோல்பரி அரசியல் திட்டத்தை ஏற்றுக்கொண்டனர் என்பதா?

அதுமட்டுமல்ல நண்பா — நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டால், இதே சோல்பரி அரசியல் திட்டத்துக்கு விசுவாசமாகச் சத்தியப்பிரமாணம் செய்யத் தயாராகத்தானே கடந்த பொதுத் தேர்தலில் நவரத்தினமும் அவரது நண்பர்களும் போட்டியிட்டனர்? நாடாளுமன்றக் கதிரைகளைப் பிடிப்பதே தமிழரசுக்கட்சியின் ஒரே நோக்கம் என்போர் தாம் எந்தக் கதிரையைப் பிடித்திட கடந்த தேர்தலில் போட்டியிட்டனர்? எட்டாத பழம் புளிக்கும் என்றால் எல்லோரும் அதை ஏற்றிட வேண்டுமா?

நாடாளுமன்றக் கதிரைக்கு ஆசைப்பட்டுக் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டதன் மூலம், தமிழரசுக்கட்சியின் வாக்குகளைப் பிரித்து — தமிழ்த்துரோகிகள் சிலர் நாடாளுமன்ற உறுப்பினர்களாவதற்கு வாய்ப்பேற்படுத்தியதொன்றே இவர்கள் செய்த கைங்கரியமாகும்!

நண்பா, வேதனையோடுதான் இதனை எழுதுகிறேன்: நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல அரசியல் சட்டத்துக்கு எதிரான சக்திகள், விடுதலையுணர்வுமிக்க கட்சிகளிடையே மோதல்களும் வாதங்களும் தவிர்க்கப்பட வேண்டியதுதான். ஆனாலும் அவர்களே துவக்கி வைக்கும் போது அதற்கு பதிலளித்திடாது இருந்திட முடியுமா என்ன?

இனத்தின் விடுதலைக்காக யாரும் போராட முன்வரலாம் — அது தமிழரசுக் கட்சிக்கு மட்டுமேயுரியதல்ல — இன விடுதலைக்குப் போராடுவதாகக் கூறிக்கொள்பவர்கள் தமிழினத்துக்கு நெருக்கடிமிக்க நேரத்தில் தமிழரசுக் கட்சியை தாக்குவதிலேயே காலம் கழிக்க வேண்டுமா? பொது எதிரியை நோக்கியே நம் அனைவரது கணைகளும் பாய்ந்தால் என்ன?

இதை அவர்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்! இதைக் கூறிடுவது கோழைத்தனத்தால் அல்ல — இனப்பாசத்தால்!

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

## அறிவித்தல்

எதிர்வரும் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் 9வது பிரதிநிதிகளின் (டெலிகேட்) மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாக புதிய செயற்குழு தெரிவு, சட்ட விதிகள் மாற்றம், தீர்மானங்கள் ஆகியன தொடர்பான பிரேரணைகள் கழக உறுப்பினர்களிடமிருந்து கோரப்படுகிறது. இப்பிரேரணைகள் அனைத்தும் எழுத்து மூலம் கழகத்தின் உறுப்புரிமை யோக்கியதாம்சம் உள்ளவர்களால் முறையாக முன்மொழிந்து, வழிமொழிந்து 1972 சித்திரைத் திங்கள் 23ம் நாளுக்கு முன்னர் கழக தலைமை பணிமனைக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

கழக உத்தியோகம், செயற்குழு உறுப்பினர் பதவிகளுக்குப் பிரேரிக்கப்படுபவர்களிடமிருந்து 'பதவி ஏற்பதற்கான' சம்மதமும் பிரேரணை மனுக்களில் எழுத்தில் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.

இங்ஙனம்,
செ. கலியபெருமாள்,
பொதுச்செயலாளர்.

இலங்கைத் தொழிலாளர் கழகம்,
(தலைமை அலுவலகம்)
117, 1/8 டிப்புள்ள வீதி,
அட்டன்.
1972 பங்குனி மீ 23:

யோகக்கலை

''எல்லோரும் இன்புற்றிருப்பது மல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே.''

தாயுமானவர்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

15 மில்க் வைற் நிலசோப் மேலுறைகளை அனுப்பி யோகக்கலை என்னும் சிறந்த புத்தகத்தை வாங்கிப் படியுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'போராட்டம் இல்லை' என்று தந்தை செல்வா கூறவில்லை!

## 'இரகசியத்திட்டம்' இல்லையென்றே கூறினர்!

## விஷமம் செய்யும் தினபதியாரே! விஷயம் புரியாமல் உளருதே!

[ தமிழரசுத் தந்தை அவர்களை கிண்டல் செய்து 18—3—72 தினபதி அத்தாணி மண்டபத்தில் தினபதியார் ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். அதற்குப் பதிலளித்து மட்டுநகரைச் சேர்ந்த அன்பர் திரு. ஆ. பொன்னுத்துரை அத்தாணி மண்டபத்துக்கு பின் வரும் கடிதத்தை 19—3—72ல் அனுப்பியிருந்தார். எல்லோரது கருத்துக்கும் மதிப்பளிப்பதாக கூறும் தினபதியார் திரு. பொன்னுத்துரையின் கடிதத்தை வெளியிடாது இருட்டடிப்பு செய்துவிட்டார். தினபதியாருக்கு அனுப்பப்பட்டு அவரால் இருட்டடிப்பு செய்யப்பட்ட கடிதம் இங்கு இடம் பெற்றுள்ளது. ]

அரசகேசரி அவர்கட்கு,
'தினபதி'
கொழும்பு.

நேற்றைய (18-3-72) "தினபதி" அத்தாணி மண்டபத்தில், "ஏனோ இந்தத் தடுமாற்றம்?" என்ற தலைப்பில் ஞானபூபதி என்பவர் எழுதியிருந்த கடிதத்தைப் படித்தேன்: அவர் கொண்ட தப்பான விளக்கங்களை நீக்கலாம் என்ற எண்ணத்துடன் இதை அத்தாணி மண்டபத்துக்கு எழுதுகின்றேன்:

தமிழரசுத் தந்தை அவர்களை அவரது அரசியல் எதிரிகள் கூட 'நேர்மையானவர்' என்று, அன்று மட்டுமல்ல, இன்றும் கூறுகின்றனர்: அப்படியிருக்கக் கடிதத்தை எழுதிய அன்பர் தந்தையைப் "பயங்கரவாதி" என நாக்கூசாமல் சாடியிருப்பது அவரது அறிவீனத்தையும், விடயத்தை விளக்கிக்கொள்ளும் ஆற்றலின்மையையுமே காட்டுகின்றது:

தந்தையவர்கள் வைத்திய சிகிச்சைக்காக இந்தியா செல்வதாக அரசாங்கத்திடம் உத்தரவு பெற்றுப் போய், தமிழகத்தில் அரசியல் பேசியிருக்கிறார் எனக் குற்றஞ் சாட்டுகிறார் அன்பர்.

தந்தையவர்கள் வைத்திய சிகிச்சைக்காகவே தமிழகம் சென்றது உண்மையாயிருக்கலாம். சென்ற இடத்தில் ஈழத் தமிழர்களின் இன்னலை அங்குள்ள தமிழ்த் தலைவர்களிடம் எடுத்துக் கூறியிருக்கலாம். உரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு இனத்தின் தலைவன், அதே இனத்தவருள்ள அண்டை நாட்டுத் தலைவனிடம் தனது இனத்தின் துயரத்தை எடுத்துரைப்பதில் என்ன தவறு இருக்கிறது?...

தனது நோயைப்பற்றிச் சிந்தித்த அதே வேளையில், தன் இனத்தின் நோயைப் பற்றியும் சிந்தித்தார் அவர். தனது நோய்க்குப் பரிகாரம் தேடப்போன இடத்தில், தனது இனத்தின் நோய்க்கும் பரிகாரம் காண வழியுண்டா எனப்பார்த்தார் அந்தப் பெருந்தகை. தன்னலம் ஒன்றுக்காக இனத்தின் நலனைப்பற்றி அறவே சிந்திக்காதவர்களின் சாம்புகளுக்கு இவையெல்லாம் எங்கே புரியப் போகின்றன?

மேலும், தந்தையவர்கள் தமிழகத்தில் அரசியல் கூட்டங்கள் எதிலும் கலந்து கொள்ளவுமில்லை: அரசியல் அறிக்கைகள் வெளியிடவுமில்லை; தமிழகத் தலைவர்களைச் சந்தித்தார். ஈழத் தமிழரின் தலைவர் என்ற ரீதியில் தமிழகத் தலைவர்கள் அன்னாரைக் கௌரவித்துக் கூட்டங்களை நடாத்தினார்கள் அப்படியான வரவேற்புக் கூட்டங்களிலேதான் தந்தையவர்கள் தனது நாட்டுத் தமிழரின் துன்ப நிலையை எடுத்துக் கூறி, தார்மீக ஆதரவையும் அனுதாபத்தையும் கேட்டார். அன்னாரிடம் பத்திரிகையாளர்கள் பேட்டி கேட்டுப் பெற்றுக் கொண்டனர்: இது பற்றி ஈழம் திரும்பிய தந்தையவர்கள் பத்திரிகைகளுக்கு விளக்கமான அறிக்கை விட்டிருந்தார்.

தமிழகத்தில் தான் கூறியவைகளை, இங்கு வந்ததும்—கோழைத்தனமாக — நீதியமைச்சரின் எச்சரிக்கைப் பேச்சைக் கேட்டுப்பயந்து— மறுத்து அறிக்கை விட்டிருக்கிறார் என்று அன்பர் கூறுகிறார்.

17-3-72ல் வெளிவந்த தந்தையின் அறிக்கையை அன்பர் சரியாக விளங்கிக் கொள்ளவில்லை என்றே தெரிகிறது.

'இரகசியத்திட்டம் எதுவும் எம்மிடமில்லை' என்று தான் அந்த அறிக்கை கூறுகிறதேயொழிய, 'போராட்டம் எதுவும் இல்லை' என்று அறிக்கை கூறவில்லை. 'நாங்கள் ரகசியத்திட்டமிடுவதாகக் கூறுவது முற்றிலும் ஆதாரமற்றதகவல். எப்பொழுதும் பகிரங்கமாகச் செயலாற்ற வேண்டும் என்பதே அன்றும் இன்றும், என்றும் எமது கொள்கை என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகின்றேன்' — மேற் கண்டவாறே அந்த அறிக்கையில் காணப்படுகின்றது. அத்தோடு, 'புதிய அரசியல் திட்டத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டோம். ஏனெனில் அது தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை அங்கீகரிக்கவில்லை; அவர்களது அபிலாஷைகளுக்கு மதிப்பளிக்கவும் இல்லை' என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

இப்படியிருக்க, "தமிழரசுக்கட்சியினர் சத்தியாக்கிரகம் மேற்கொள்ளப்போவதில்லையென்றும், ஒத்துழையாமை இயக்கம் நடத்தப் போவதில்லையென்றும், அப்படிக் கூறப்படுவதெல்லாம் ஆதாரமற்ற செய்தியென்றும் தந்தை அறிக்கை வெளியிட்டிருக்கிறார்" எனக்கூறி உண்மையான அறிக்கையைத் திரித்திருக்கிறார் அன்பர்: திரித்தல் அன்பருக்குக் கை தேர்ந்தகலைபோலும்;

தந்தையவர்கள் தமது அறிக்கையில் 'இரகசியத் திட்டம்' ...

...கிறார் என்பது மிக எளிதாக விளங்குகின்றதே!

தமிழரசுக் கட்சியினர் தமது போராட்டங்கள் எல்லாவற்றையும் பகிரங்கமாகச் சாத்வீக முறையில் தான் நடத்தியிருக்கிறார்களேயொழிய; இரகசியமாகப் பலாத்காரமுறையில் நடத்தியதாக எந்தச் செய்தியும் கிடையாது. இதையே தந்தையின் அறிக்கை காட்டிக் காட்டுகிறது. தெரிந்த இதை அன்பர் ஞானபூபதி இப்போதாவது புரிந்து கொள்ளட்டும்!

அடுத்து, 'இலங்கை அரசு சீனச்சார்புடையதாக இருக்கிறது; சீன திருகோணமலையில் படைத்தளம் அமைக்க முற்பட்டால், இந்தியா செயலில் இறங்க வேண்டி வரும்...' என, தந்தை தமிழகப் பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டி கொடுத்ததாகவும், அது உள் நாட்டு இராணுவ இரகசியங்களை வெளிநாட்டில் பேசிய தேசத்துரோகக் குற்றம் என்றும் அன்பர் கூறுகிறார்: அதில் இராணுவ இரகசியமும் தேசத் துரோகமும் இருப்பதாகக் கூறுவது சிரிப்புக்குரிய விடயமாகும்: அரசியலை அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்து அலசியவர்களுக்கே தென்படாத விடயம், அன்பர் ஞானபூபதிக்குத் தென்பட்டது மிகமிக வேடிக்கையானதே! மருண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது போல அன்பருக்கு எல்லாமே இரகசியமாகத்தான் தெரிகின்றது:

பலாத்காரத்தைப்பற்றியே எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருப்பவர்களுக்குத் தான் எல்லாமே இரகசியமாகவும், எல்லோருமே பயங்கரவாதிகளாகவும் தெரியும். அகிம்சை வழி நிற்பவர்களின் செயல்கள் எப்போதும் சாத்வீக அடிப்படையில் பகிரங்கமாகவே இருக்கும்:

உரிமை மறுக்கப்படும் ஒரு இனத்தின் சாத்வீக உரிமைப் போராட்டத்தை, 'BORE' ஆட்டம் என அதே இனத்தவன் ஒருவன் எள்ளி நகையாடும் 'பண்பை' நம் இலங்கைத் தமிழரைத் தவிர உலகில் வேறு எந்த இனத்திலுமே காண முடியாது. அதற்காக ஈழத் தமிழ் மக்கள் வெட்கமும் வேதனையும் அடைய அடைய வேண்டிய நிலையில் உள்ளார்கள்!

இங்ஙனம்,
ஆ. பொன்னுத்துரை.
21/1, முனைத்தெரு,
மட்டக்களப்பு.
19-3-72.

## மக்கள் குரல்

### தமிழன் பெருமையடைகிறான்

அன்புள்ள ஆசிரியருக்கு:-

தமிழ் நாட்டிற்கு தந்தை செல்வாவும், தளபதி அமிர்தலிங்கமும் அவர் மனைவியும் தாங்களும் திடீரென மேற் கொண்ட விஜயத்தைப் பற்றியும் அங்கு நடந்தவை பற்றியும் இங்கு சில பத்திரிகைகள் நடுநிலை கண்டுகொண்டு செய்திகள் வெளியிட்டாலும் கை தாங்கிகெட்ட கும்பைகளும், தினபதியும அதை வைத்துக்கொண்டு பல, தம், தும், கலரூன செய்திகளை வெளியிட்டு தமிழ் மக்களை அவர்களைப் போல் அரசியல் தெரியாத பாமரர்கள் என்று எண்ணிவிட்டார்கள் போலும்:

உண்மையில் இந்த விஜயத்தால் உடனடி பலன் ஏற்படாவிட்டாலும் உரிய நேரத்தில் இதன் தாக்கம் நிச்சயம் பலன் அளிக்காமல் போகாதென்றே நான் நம்புகிறேன்: ஏனெனில் அவர்களுடைய விஜயத்தைப்பற்றி தமிழ்நாடு பத்திரிகைகள் தடையால் விபரமாக அறிய முடியாவிட்டாலும் சென்னை மாநகரசபை தந்தை செல்வாவுக்கு கொடுத்த வரவேற்பும், தமிழக தலைவர்கள் சந்திப்பும், அங்கு எதிரொக நாத்திகம் இராமசாமி போன்ற பசசோத்தி அரசியல் வாதிகள் பேசிய பேச்சுக்களும், இந்துஸ்தான் டைம்ஸ்' போன்ற பல பெரிய பத்திரிகைகள் ஈழத் தமிழர்களுடைய நிலையைப் பற்றியும், தமிழரசுக் கட்சியைப் பற்றியும், பல செய்திகள் வெளியிட்டதன் மூலம் அவர்களுடைய தமிழக விஜயம் எதிர்பார்த்ததைவிட வெற்றி என்றே நான் நம்புகின்றேன்:

அதுவுமல்லாமல் இந்த தள்ளாத வயதில் — சுகவீன முற்ற நிலையில் — வெளிநாடுகளுக்கு செல்ல தேக நிலை இடம் கொடுக்காத நிலையில் — திடீரென தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்து, எங்கள் ஈழத் தமிழர்களுடைய நிலையைப் பற்றியும் அவர்களுடைய இருள் சூழ்ந்த வருங்காலத்தைப் பற்றியும் அகில இந்தியாவிலும் பங்களாதேஷ் விவகாரம் சூடு தணிய முன்னர் எதிரொலிக்க செய்துவிட்டு வந்த தமிழர்களின் தனிப்பெருந் தலைவன் திரு. செல்வநாயகத்தினதும் தமிழர் தளபதி அண்ணன் அமிர்தலிங்கத்தினதும் அரசியல் இராஜ தந்திரத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும்: ஒவ்வொரு தன்மானத் தமிழனும் இவர்களுடைய செயலால் பெருமைப்படுகிறான்.

வி. ஆ...

## நல்ல பகிடிகள்

### இலங்கையில் ஓர் ஒண்ணும் நம்பர் பைத்தியம்!

"'ஐயோ! தமிழரசுக்காரன்' அம்மா! பயங்கரம்! மாணவர் பேரவை! டுமீல்! ஐயோ! குண்டு! குண்டு! ஆ! ஓடிவாங்கோ! என்னைக் காப்பாற்றுங்கோ!"

நித்திரையில் இப்படி நம்நாட்டில் அடிக்கடி ஒருவர் கனவு கண்டு கத்துகிறாராம்: அவரது மனைவி இரவு முழுவதும் தூக்கம் இல்லாமல் கணவன் படும் துன்பத்தை சகிக்கமுடியாமல் தவிக்கிறாளாம். 'புதுயுகம்' படைக்கும் ஆசிரியரே இந்த ஆள்! நீலன் கந்தசாமியை அழைத்து ஏதேனும் மந்திரம் செய்து ஆளைக் குணப்படுத்தினால் நல்லது... பாவம்... பயத்தால் தட்டிப் போட்டுது!

### திருமதி 'டினர்பதி'

கொழும்பில் எங்கோ பெற்றார் ஆசிரியர் சங்கத்தினர் ஓர் இரவு விருந்து (டினர்பார்ட்டி) வைத்தார்களாம். இலங்கையில் காற்சட்டை போடுவது தமிழர் பண்பாடல்ல என்று பத்திரிகையில் எழுதிவிட்டு— அன்றாடம் அலுவலகத்துக்கு தானே காற்சட்டையோடு போய்வரும் ஒரு பத்திரிகை ஆசிரியரின் மனைவியும் இவ் விருந்து வைபவத்தில் கலந்துகொண்டாராம். சாப்பாட்டு மேசையில் கத்தி-கரண்டி-முள் எல்லாம் வைக்கப்பட்டிருந்தும் தமிழர் பலர் கையால் தமிழ்ப் பண்பாட்டுக்கு அமையச் சாப்பிட்டார்களாம்: ஆனால் பத்திரிகை ஆசிரியரின் மனைவி மட்டும் கரண்டி முள்ளால் சாப்பிட ஆரம்பித்து — எப்படியோ சங்கடப்பட்டு— சாப்பிட்டு முடித்தாராம்: ஆங்கிலப் பாணியில் சாப்பிடும்போது சாப்பிட்டு முடிந்ததும் தட்டில் கரண்டி முள்ளை கவிழ்த்து வைக்கவேண்டும் என்று ஒருமுறை உண்டாம். ஆனால் இந்தக் காற்சட்டை எழுத்தாளரின் மனைவி கரண்டியையும் முள்ளையும் தட்டில் நிமிர்த்தி வைத்தபோது எல்லோரும் தங்களுக்குள்ளேயே சிரித்துக் குசுகுசுத்துக்கொண்டார்களாம்... பாவம் திருமதி 'டினர்' பதியார்!

### கள்ளிப்பூ கருகுதையா

குழந்தை கறுப்பாக இருந்தாலும் தாய் பிள்ளைக்கு வெள்ளையன் என்று பெயர்வைப்பாள் அல்லவா? அப்படித்தான் 'கள்ளிப் பூ' போன்ற ஒரு பத்திரிகையைத் தொடக்கிய ஈழத்தின் முற்போக்கு எழுத்தாளர் ஒருவர் தன் சஞ்சிகைக்கு வேறொரு நல்ல பூவின் பெயரை வைத்தார். ஆனால் கள்ளிப் பூ கள்ளிப் பூ தான் என்பது நன்கு தெரிந்த ஈழத்து வாசகர்கள் என்னதான் அது முல்லை — சாமந்தி — என்று பெயர தாங்கினாலும் வாங்குவார்களோ! பாவம்... இந்த முற்போக்கு எழுத்தாளர் தமிழகத்தில் இருந்து வரும் பத்திரிகைகளைத் தடுத்தால் தன் 'கள்ளிப் பூ' ஓரளவு விலைபோகும் என்று கருதி ஆட்சியினருக்கு வால் பிடித்து பத்திரிகைத் தடையும் கொண்டு வந்து பார்த்தார் பத்திரிகைத் தடைக்குப் பின்பு 'கள்ளிப் பூ' விற்பனை 224 பிரதிகள் குறைந்திருக்கிறதாம்! என்னதான் முயன்று விற்கப்போனாலும் கள்ளிப் பூ, கள்ளிப் பூதானே! இந்தச் சஞ்சிகையின் மொத்தம் விற்பனையே 650 பிரதிகள்! அதில் 224 பிரதிகள் குறைந்தால் மீதியைக் கணக்குப்போட்டுப் பாருங்களேன்!

—கோமாளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவை-மகேசன்

(10)

## சி. ஐ. டி. வேட்டையாடிய ஈழத்து எழுத்தாளர்



# அண்ணாவின் தமிழ்நாடு கண்டேன்

இலங்கையிலிருந்து செல்பவர்களை இந்தியப்பத்திரிகைகளும், எழுத்தாளர்களும் மதிப்பதில்லை; கௌரவிப்பதில்லை என்கின்ற ஒரு குற்றச்சாட்டினை ஈழத்தில் அடிக்கடி கேட்டுவருகிறேன்; இந்தச் சத்தம் முற்போக்கு எழுத்தாளர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்வோரிடமிருந்தே சற்று அதிகமாக எழுவதனையும் அவதானித்து இருக்கிறேன். நம்மை மற்றவர்கள் மதிக்கவில்லையென்று இங்குள்ள எழுத்தாளர்கள் கூப்பாடு போடுவதைக் காணும் போது உண்மையிலேயே நான் மிகவும் கூச்சப்பட்டிருக்கிறேன்.

மதிப்பு, மரியாதையென்பது சொல்லி வைத்து கொடுக்கும் அல்லது வாங்கும் ஒரு பொருளல்ல. மதிக்கப்படவேண்டியவர்களைக் காணும்போது நம்மை அறியாமலே மரியாதை செய்கிறோம். பாராட்டுகிறோம், போற்றுகிறோம். ஒருவரைக் காணும்போது அவரைப் பற்றி தானாக நமக்குள்ளே ஏற்படும் மரியாதையே உண்மையான மரியாதையாகும். சொல்லி வைத்தோ, திட்டமிட்டோ முகமனுக்காக ஒருவரை மரியாதை செய்வது, உண்மையாக அவரை மதிப்பதாகாது. அதனால் பயனும் கிடையாது.

மற்றவர்களால் மதிக்கப்படவேண்டிய அளவுக்கு நம்மை நாம் உயர்த்திக் கொள்ளவேண்டுமே தவிர மற்றவர்கள் நம்மை மதிக்கவில்லையே என்று நம்மை நாமே தாழ்த்திக்கொள்ளுவது கூடாது. இதை ஈழத்து எழுத்தாளர்கள் அனைவரும் மனதில் பதிய வைத்துக்கொள்ளவேண்டும்.

சங்கத்துப் பூதந்தேவனார் காலத்திலிருந்து இன்றுவரை மதிக்கப்படவேண்டிய ஈழத்து அறிஞர்களையும், புலவர்களையும் கவிஞர்களையும் தமிழ் நாடு மதித்துப் பாராட்டிக்கொண்டே வந்திருக்கிறது என்பதை நடுநிலைகண்கொண்டு நோக்கும் யாருமே ஒப்புக்கொள்வர்.

ஒரு சின்ன உதாரணத்தை இதற்குச்சான்றாக இங்கு எடுத்துக்காட்டவிரும்புகிறேன். இது தற்பெருமைக்காக அல்ல — தமிழ் நாடு மதிக்கவேண்டியவர்களை மதித்தே வருகிறது என்பதை எடுத்துக்காட்ட!

சென்ற (1971) ஆண்டு பெப்ரவரியில் நான் திருச்சி சென்றிருந்தபோது நடந்த ஒரு சம்பவத்தை நினைவு கூருகிறேன். 'தினத்தந்தி' என்ற பெயரைக்கேட்டால் இங்குள்ள சில கொம்யூனிஸ்ட் எழுத்தாளர்கள் முகம் சுளிப்பார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அதே தினத்தந்திதான் தமிழ் நாட்டிலேயே அதிகம் விற்பனையாகும் நாளிதழ் என்பது புள்ளி விபரம் தரும் உண்மையாகும்.

தினத்தந்தி திருச்சிப்பதிப்பின் ஆசிரியராக இருப்பவர் "திருச்சிபாரதன்" என்பவர். திறமையும் துடிப்பும் ஆற்றலும் மிக்க இளைஞர். திருச்சி சென்றிருந்த என்னைத்தேடி இந்த இளைஞர் தானாக வந்தார். இவரை நான் முன்பின் அறிந்தது மில்லை. இவருடன் தொடர்பு கொண்டிருந்ததுமில்லை.

மிகச் சாதாரணனான என்னை ஒரு 'பிரமுகராக்கி' என்னிடம் ஒரு 'செவ்வி' பெற்று தமது ஏட்டில் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருந்தார்; ஈழத்து எழுத்தாளர்களை தமிழ் நாட்டார் மதிப்பதில்லை என்று கூறி இங்கு துவேஷப் பிரசாரம் செய்து வரும் ஒரு சிலரது கண்கள் திறக்கவேண்டும் என்ற கருத்தில், தினத்தந்தி 10-2-71ல் வெளிவந்திருந்த அந்தச் செவ்வியினை இங்கு அப்படியே தருகிறேன்.

### திருச்சி பிப் —19—

''இலங்கைத்தமிழர்களுக்காக தி. மு. கழகம் பாடு படுகிறது'' என்று இலங்கைத் தமிழர் பிரமுகர் பாராட்டு தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள சுதந்திரன் என்ற தமிழ்ப்பத்திரிகையின் ஆசிரியர் கோவை மகேசன் திருச்சிக்கு வந்தார்.

நிருபர்களுக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:-

"தமிழ், தமிழ் இனம், தமிழ்நாடு தலை நிமிர்ந்தது தி. மு. கழக ஆட்சி ஏற்பட்ட பின்னர் தான் என்பது இலங்கைத் தமிழர்களின் கருத்தாகும்.

"இலங்கைத் தமிழர்கள் 1858ம் ஆண்டு சிங்களவர்களால் அடித்து உதைக்கப்பட்டபோது நமக்காக கொதித்து எழுந்த ஒரே இயக்கம் தி. மு. கழகம்.

"1961ம் ஆண்டு இலங்கைத் தமிழர்கள் உரிமை கோரி போராட்டம் நடத்தியபோது அந்தப் போராட்டத்தை இராணுவம் கொண்டு நசுக்கியது இலங்கை அரசு. அப்போது அந்த அநீதியை எதிர்த்து தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தி இலங்கைத் தமிழர்களுக்காக குரல் எழுப்பிய இயக்கம் தி. மு. கழகம்- இந்த நன்றி உணர்வை இலங்கைத்தமிழர்கள் மறந்து விடவில்லை—

"எனவேதான் இலங்கைத் தமிழ் மக்களுக்கு துன்பம் நேர்கிறபோது துடிதுடித்து எழும் விடுதலைப்பேரியக்கமான தி. மு. கழகம் மீண்டும் தமிழக ஆட்சி பீடத்தில் அமரவேண்டும் என்று இலங்கைத் தமிழர்கள் விரும்புகிறார்கள்''—

—மேற்கண்டவாறு கோவை மகேசன் கூறினார்''

ஃ ஃ ஃ

இவ்வாறாக தமிழ் நாட்டின் பிரபல நாள் ஏடு ஒன்று மிகச் சாதாரணனான என்னையே மதித்து என்னிடம் செவ்வி கண்டு செய்தி பிரசுரித்ததென்றால் — அதன் பொருள் இலங்கை எழுத்தாளர்களை தமிழ் நாட்டார் எப்பொழுதுமே மதிக்கிறார்கள் என்பதுதான்!

இலங்கை எழுத்தாளர்களை தமிழ் நாட்டார் மதிக்கவில்லையே யென்று கூக்குரலிடும் முற்போக்குக் கூட்டத்தினர், தமிழ் நாட்டில் எத்தனை தூரம் முறை கேடாகவும், பண்புக்கேடாகவும் நடந்து இலங்கைத் தமிழர்களின் மானத்தையும் மரியாதையையும் கெடுத்திருக்கின்றனர் என்ற விபரத்தை அறிஞர் கி: ஆ: பெ: விசுவநாதம் அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தபோது அறிந்து மிகவும் விசனப்பட்டேன்.

ஈழத்தமிழர்கள்பால் ஆழமான பற்றும் பாசமும் கொண்டவர் அறிஞர் விசுவநாதம், ஈழத்தமிழர்களுடன் நெருங்கி உறவாடி நமது குறைகளையும் நிறைகளையும் தெரிந்து வைத்திருப்பவர் அவர். ஈழத்தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளை ஆரம்ப முதற்கொண்டே தெளிவாகவும் ஆழமாகவும் அறிந்து வைத்திருப்பவர் அவர். ஈழத்தமிழன் என்று சொல்லிக்கொண்டு யார் போனாலும், அவருக்காக தமது வீட்டுக் கதவை எந்நேரமும் திறந்துவைத்திருக்கும் பண்பாளர் அவர்; தமிழ்ப் பண்பாடு என்பதற்கு ஓர் உருவம் கொடுத்துப் பார்க்க விரும்பினால், முத்தமிழ்க் காவலர் விசுவநாதத்தின் உருவத்தையே நம் முன் நிறுத்திப் பார்த்துக் கொள்ளலாம்!

இத்தகைய அறிஞரைச் சந்திப்பதற்காக பட்டுநூல்காரத் தெருவிலுள்ள அவரது இல்லத்துக்கு நான் சென்றிருந்தபோது, யாரோ இளம் பெண் ஒருத்திக்கு தந்தை நிலையில் நின்று புத்திமதி கூறிக்கொண்டிருந்தார் அவர்; அவரது குரலிலே கண்டிப்பு தொனித்தது—

"எல்லாம் சொல்லியிருக்கேன்: நீ போம்மா... வேலை கிடைக்கும்: ஒன்றுக்கும் யோசிக்காதே!"

'வேலையில் நிரந்தரமாக வச்சுக்குவாங்களா?' —இப்படி அவள் கேட்டாள்.

'அதை நான் இப்போதே சொல்லமுடியாது: நீ கெட்டித்தனமாக நடந்தால் வச்சுக்குவாங்க. சரி சென்றுவா அம்மா...'

அந்தப் பெண் விடைபெறுகிறாள்; நாள்தோறும் முத்தமிழ்க்காவலரிடம் எத்தனை பேர் இப்படி வந்து உதவி பெற்றுச் செல்கிறார்களோ? எத்தனை பேரைத் தாங்கும் ஆலமரமாக அவர் இருக்கிறாரோ!

'வணக்கம் ஐயா' என்கிறேன்:

'வாருங்கள் தம்பீ... உட்காருங்கள்' என்கிறார் அவர்; இதைத் தொடர்ந்து பேச்சு ஆரம்பமாகியது. தந்தை செல்வாவின் உடல் நிலை பற்றி விசாரித்தார்; அரசியல் நிலைமைகளைக் கேட்டறிந்தார். சுதந்திரன் ஒழுங்காக வாசித்து வருவதாகத் தெரிவித்தார்; நமது பொதுச் செயலாளர் அமிர்தலிங்கம் கடந்த பொதுத்தேர்தலில் வெற்றிவாய்ப்பை இழந்தது குறித்து மிகுந்த கவலை தெரிவித்தார்;

தமிழக அரசியல் இந்திய அரசியல் நிலை பற்றி யெல்லாம் பேசினோம்; தமிழ்நாட்டில் பொதுவாக அரசியல் பண்பாடு சீரழிந்து வருவது குறித்து மிகவும் மனம் நொந்து பேசினார் அப்பெரியார்.

'உங்கள் உடல் நலம் எப்படி? 'குடல் புண்' இப்போது தொல்லை கொடுப்பதில்லையா?' என்றேன்;

'உணவை பெருமளவு குறைத்துக் கொண்டுவிட்டேன். கடந்த ஐம்பது ஆண்டு [illegible] வருகிறேன். இப்போது கூட [illegible] டேயிருக்கிறேன்; எல்லாம் நான், முழுவதும், இனத்துக்கும் மொழிக்கும் என்னால் முடிந்த அளவு தொண்டாற்றுவேன். நோயைப் பற்றி நான் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை' என்றார் அவர்.

ஆம் இந்த வயதிலும், தமது கடமைகளைத் தாமே செய்துகொண்டு 24 வயது இளைஞன் போல சுறுசுறுப்புடன் இயங்கிவருகிறார் விசுவநாதம்! தமிழன்னை உண்மையில் பாக்கியம் செய்தவள்தான்!

திருவாட்டி விசுவநாதம் அவர்கள் கொண்டுவந்து தந்த சிற்றுண்டி, காப்பி வகை சுவைத்துக்கொண்டிருந்தபோது விசுவநாதம் கேட்டார்: 'உங்கள் நாட்டு எழுத்தாளர் கணேசலிங்கன் என்பவரைத் தெரியுமா?'

'ஆம், தெரியும், அவர் ஒரு கொம்யூனிஸ்ட்- தமிழ் நாட்டுக்கும் ஈழத்துக்குமிடையே இருந்துவரும் தொடர்புகளை அறுத்தெறிய வேண்டுமென்பதில் முன்நிற்பவர்' என்றேன் சாவதானமாக.

இந்தக் கணேசலிங்கன் என்பவரை அறியாதவர்களுக்கும் இச்சமயத்தில் அறிமுகப்படுத்தி வைப்பது அவசியம் என நினைக்கிறேன். தமிழ்நாட்டிலிருந்து பத்திரிகைகளும் புத்தகங்களும் இலங்கைக்கு வரக்கூடாதென்று கழுதைக் கூச்சல் போடும் ஒரு கொம்யூனிஸ்ட் இந்தக் கணேசலிங்கன். 'காதல்' என்ற புனிதமான சொல்லுக்கு புதிய வியாக்கியானம்ஒன்றைக் கண்டுபிடித்தவர் இவர். அஃதென்ன தெரியுமா?

'மனிதனின் சுரப்பிகள் வேலைசெய்யும்போது அதிலிருந்து ஒருவகைத் திரவம் வெளியேறுகிறதல்லவா? அதன் பெயரே காதல்.'

என்று தமது சிறுகதைத் தொகுப்பொன்றில் காதலுக்கு புதிய இலக்கணம் வகுத்திருக்கும் பிறவி இவர்; இதுதான் முற்போக்கு, யதார்த்தம் என்று இந்நாட்டு இளைஞர்கள் சிலரை 'பேய்க்காட்டி' வருபவர் இவர்.

இலங்கைக்கு இந்தியப் பத்திரிகைகள் வரக்கூடாதென்று ஒரு பக்கம் கத்திக்கொண்டே, மறுபக்கம் சென்னையிலுள்ள பாரி நிலையத்திலே தமது நூல்களை பதிப்பித்து வெளியிட்டுக்கொண்டிருப்பவர் இவர். இத்தனைக்கும் இவர் சொந்த அச்சகம் வேறு வைத்திருப்பவர்.

இந்தியாவில் இவர் பதிப்பித்த நூல்களுக்கான அச்சுச் செலவுகளுக்கு இங்கிருந்து எப்படி பணம் அனுப்பப்பட்டது; அங்கிருந்து இவரது புத்தகங்கள் எப்படி இங்கு தருவிக்கப்பட்டன என்பதெல்லாம் அரசாங்கம் கண்டுபிடிக்க வேண்டிய சங்கதிகள். தயவுசெய்து என்னை எதுவும் இதுபற்றிக்கேளாதீர்கள்!

இந்தக் கணேசலிங்கனைப் பற்றித்தான் முத்தமிழ்க் காவலர் கேட்டார். கணேசலிங்கன் திருச்சியில் விசுவநாதத்துடன் பலநாட்கள் தங்கியிருந்தாராம்; அவர் ஒரு கம்யூனிஸ்ட் என்பது தமக்குக் கடைசிவரை தெரியாதென்றார் விசுவநாதம். தமிழ் நாட்டில் கணேசலிங்கன் செய்த கழுத்தறுப்பை விவரித்தார்.

'கணேசலிங்கன் ஈழத்தவர் என்பதால் எல்லா உதவிகளும் செய்துகொடுத்தேன்; என்னோடு திருச்சியில் தங்கியிருந்தார்; சென்னையில் டாக்டர் மு: வ:வுடனும் சிலகாலம் தங்கியிருந்து பாரி நிலையத்தில் தமது நூல் ஒன்றினை அச்சிடுவித்தார்; சாதாரண ஒரு நூலாக அது இருக்கும் என்றே நான் எதிர்பார்த்தேன்: ஆனால் பின்னர்தான் அது இந்தியாவில் சனநாயகத்தை கொன்றொழித்து வன்முறையைப் பரப்புவதையே இலட்சியமாகக் கொண்ட நக்சலைட்டுகளின் கருத்துக்களைப் பரப்பும் நூல் என்பது தெரியவந்தது: இதையடுத்து சி: ஐ: டி: பொலிசார் கணேசலிங்கனைப் பற்றி என்னிடம் வந்து விசாரித்துச் சென்றனர். பாரி நிலையத்திலும் விசாரித்ததாக கேள்விப்பட்டேன்—''

என்று கூறினார் முத்தமிழ்க் காவலர்.

'உங்கள் நாட்டின் தமிழ் கம்யூனிஸ்டுகள் இங்கே எங்கள் நாட்டில் கண்காணிக்கப்படுவதாக தெரிகிறது. இலநாட்களுக்குமுன் திரு: செ: கணேசலிங்கனைப்பற்றி இங்குள்ள சி: ஐ: டி.யார் என்னிடம் விசாரித்தார்கள்' என்று தில்லியிலிருந்து டாக்டர் சாலை இளந்திரையன் அவர்களும் எனக்கெழுதியிருந்தது அப்பொழுதுதான் என் நினைவு வந்தது.

விசுவநாதம் அவர்கள் ஈழத்து கொம்யூனிஸ்ட் எழுத்தாளர் ஒருவரின் முறைகேடான நடவடிக்கையை விபரித்தபோது, நானும் ஓர் இலங்கைத் தமிழன் என்ற முறையில் வெட்கப்படாமல் எப்படியிருக்கமுடியும்?

ஈழத்து தமிழ் எழுத்தாளர்கள் என்று தம்பட்டமடிப்போர் இப்படிப் பண்புக்கேடாகவும் கழுத்தறுக்கும் விதத்திலும் தமிழ் நாட்டில் நடந்துகொண்டால் யார்தான் அவர்களை மதிப்பார்கள்?

●

இப்படியாக ஓராண்டுக்கு முந்திய நினைவுகளை என் மனதில் நிழலாடவிட்டுக்கொண்டிருந்த நான், 'விமானம் கீழே இறங்கப் போகிறது; பெல்ட்டை மாட்டிக்கொள்ளுங்கள்' என்ற அறிவிப்பைக் கேட்டு என்னைச் சுதாரித்துக் கொண்டேன்;





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமாஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரின் மகத்தான புத்தாண்டு வெளியீடு

இப்பொழுது காட்சியளிக்கிறது!

கெப்பிட்டல் (கொழும்பு) - பிளாசா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ்நகர்)



சிவாஜி, லட்சுமி, முத்துராமன், நிர்மலா
நாகேஷ், குமாரி சச்சு, நம்பியார்

—நடித்த —

இசை: M.S.விஸ்வநாதன் **தங்கைக்காக** டைரக்ஷன்: T. யோகானந்

இப்பொழுது காட்சியளித்துக்கொண்டிருக்கிறது

செல்லமகால் (கொட்டாஞ்சேனை) நெல்சன் (திருமலை) இம்பீரியல் (மட்டுநகர்)

ஜெமினி கணேசன், ராஜ்ஸ்ரீ, நாகேஷ்,

மற்றும் பலர்
நடித்த




கெபிட்டி
2வது மாதம்
கண்ணே
பாப்பா

**பத்தாம்பசலி**

கதை—வசனம்— டைரக்ஷன்:—கே. பாலசந்தர்.

சிலோன் என்டடெயின்ஸ்மென்ட்ஸாரின் திரைகளில் காட்சியளிக்கிறது

3வது வாரம் செண்ட்ரல் (மருதானை) ஜெஸிமா (கிராண்பாஸ்) ராணி (யாழ்நகர்)



சிவாஜிகணேசன், ரங்கராவ்,
ஜெயலலிதா, நாகையா,
பாலாஜி, ராகவன்,
சந்திரபாபு, பண்டரிபாய்,
சுந்தரராஜன், மனோகர்,

நடிக்கும்
சுஜாத்தாவின்! **ராஜா** (ஈஸ்மென் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 72-ம் வருடம் ஏப்ரில் மாதம் 16-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது. — ஆசிரியர் கோவை மகேசன்.